விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 14 புதன்கிழமை (28.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே



## ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் ஆட்சியமைப்பது

# சுய நலத்திற்காக கூட்டமைப்பு கொள்கையை கைவிட்டதாகும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



*(யாழ்ப்பாணம்)*

*உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியின் ஆதரவை பெற்றுக்கொண்டமையானது சுய நலத்திற்காகவும் பதவிக்காகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கொள்கைகளை கைவிட்டதாகவே கருதப்படும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.*

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலக திறப்பு விழா நேற்று யாழ்.கந்தர்மடம் அரசடி வீதியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முதலமைச்சரிடம், உள்ளூராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பி கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து வருகின்றமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அக்கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 24

### ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி
## வடக்கு மாகாண சபையால் ஜனாதிபதிக்கு மனு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதியான சச்சிதானந்தன் ஆனந்தசுதாகரனை பொது மன்னிப்பளித்து விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு வடக்கு மாகாண சபையால் மனு ஒன்று நேற்றையதினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு யாழ்ப்பாணம், கைதடியிலுள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. 23

## சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பு

(கொழும்பு)

பால் மாவின் விலையை 80 ரூபாவினாலும், 12.5 கிலோ எடையுடைய சமையல் எரிவாயுவின் விலையை 270 ரூபாவினாலும் அதிகரிக்க கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. 23

### எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள்
## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண சபையில் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு யாழ்ப்பாணம், கைதடியிலுள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. அதன் போதே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது. 23

### ஈ.பி.டி.பியின் ஆதரவுக் கரத்துடன்
## பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமானது





(கரணவாய்)

ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபையினை தம்வசமாக்கிக் கொண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

பருத்தித்துறை நகரசபைக்கான தெரிவு நேற்று 27.03.2018 காலை உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 23

### கொழும்பு மாளிகாவத்தையில்
## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு


(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் 13

## உள்ளே...

தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே...

# பாராட்டி பெருமை கொள்கிறோம்



## "ஆன்மீக ஜோதி" முருகேசு செல்வக்குமார் சர்மா

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று வற்றாப்பளையை பூர்வீகமாகவும், வவுனியா தோணிக்கல் கிராமத்தை தற்போதைய வதிவிடமாகவும், முல்லைத் தீவு முள்ளியவளை கலைமகள் வித்தியாலய பழைய மாணவனும், முருகேசு யோகம்மா தம்பதிகளின் புதல்வனும், வவுனியா தோணிக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய பூசகரும், ஆன்மீக மக்கள் பணியில் இலங்கையில் தேசிய ரீதியில் ஆன் மீகப் பணியை செய்து வருபவரும், சத்தியஜோதி, தேசபக்தர், சமூகஜோதி போன்ற தேசிய விருதுகளைப் பெற்றவருமான திருவாளர் முருகேசு செல்வக்குமார் சர்மா அவர்களுக்கு அவரின் சிறந்த ஆன்மீகப் பணியை பாராட்டி இந்திய அரசால் "ஆன் மீக ஜோதி" எனும் உயரிய விருதினை யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் மாண்பு மிகு ஆ.நடராஜன் அவர்கள் 07.03.2018 அன்று இந்தியத் துணைத் தூதரகத்தில் வைத்து இவ்விருதினை வழங்கி மதிப்பளித்துள்ளார்.



## "வித்தகக் கவிஞர்" ஜெயம் ஜெகன்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவை பூர்வீகமாகவும், புதுக் குடியிருப்பு றோ.க.வித்தியாலயத்தின் பழைய மாணவனும் கலைப்பட்டதாரியும் இலங்கை யோகாப் பயிற்சி கல்லூரியின் இயக்குநரும், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், வர்மக்கலை, குங்பூ, கராத்தே ஆசிரியர் 2 ஆவது கறுப்புப் பட்டி பெற்றவரும், பேச்சாளர், பாடலாசிரியர், யோகாசிரியர், நாடக நடிகர், நாடக நெறியாளர், புகைப்படக் கலைஞர், ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளர் எனப் பல துறைகளில் சிறந்து விளங்கும் திரு.ஜெயம் ஜெகன். இவரின் சிறந்த இலக்கியப் பணிக்காக இந்திய அரசினால் வித்தகக் கவிஞர் மற்றும் சிறந்த பேச்சாளருக்கான உயரிய விருதுகளை யாழ்.இந்தியத்துணைத்தூதுவர் மாண்புமிகு ஆ.நடராஜன் அவர்கள் 07.03.2018 அன்று இந்தியத்துணைத்தூதரகத்தில் வைத்து மதிப்ப ளித்துள்ளார்.



## மக்களின் தொண்டன் "சமூகமாமணி" யோகதாசன் யூட் நிமலன்

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் முல்லைத்தீவு கொக்கிளாய் கிராமத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும், யோகதாசன் நிர்மலா தம்பதிகளின் புதல் வனும், செஞ்சோலை அறிவுச் சோலை குடும்பத்தின் தலைமகனும், அகில இல ங்கை சமாதான நீதவானும்,

மு/ கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
மு/ கொக்குத் தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
மு/ கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவனும், தமிழீழ சட்டக் கல்லூரியில் ஐந்தாம் அணியில் சட்டம் பயின்று சட்டமாணி (ATTORNEY – AT – LAW) பட்டம் பெற்றவரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கை நெறியினை நிறைவு செய்து "மனித உரிமைகள் பாதுகாவலர்" எனும் பட்டத்தைப் பெற்றவர்..இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் முல் லைத்தீவு மாவட்ட நிர்வாக பணிப்பாளரும்,அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரதம அமைப்பாளரும், இல ங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியின் போசகரும், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தலைவரும், இலங்கையில் மூவின மக்களுக்கு தலை சிறந்த சமூக சேவைப் பணியைச் செய்தமைக்காக இலங்கையின் "முதலாவது வாழ்நாள் சமூக சேவையாளர்" விருதினைப் பெற்றவர். தேசிய ரீதியில் மக்களுக்கு பல்துறைகளில் தமது சமூக சேவைப் பணிகளை செய்து வரும் ஊடகவியலாளர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர், சூழலியலாளர், பிரபல சமூக சேவையாளர், சமூக ஆர்வலர், புகைப்படக் கலைஞர், நாடகக் கலை ஞர், சமாதானத்தூதுவர், மக்களின் தொண்டன் கலைமாமணி யோகதாசன் யூட் நிமலனின் தன்னலமற்ற தலை சிறந்த மக்கள் சேவையினைப் பாராட்டி இந்திய அரசினால் "சமூகமாமணி" என்னும் உயரிய விருதினை யாழ்.இந்தியத் துணைத்தூதுவர். மாண்புமிகு ஆ. நடராஜன் அவர்கள் 07.03.2018 அன்று இந்தியத் துணைத்தூதரகத்தில் வைத்து வழங்கி மதிப்பளித்துள்ளார்.

*வாழ்த்துவோர் :*

**எங்கள் மண்ணின் மைந்தர்களுக்கு விருது வழங்கி மதிப்பளித்த இந்திய அரசிற்கு எமது மாவட்டம் சார்பாக நன்றிகளை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். வாழ்த்துவோர் முல்லைத்தீவு மாவட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள் மற்றும் இலங்கை யோகாப்பயிற்சிக்கல்லூரி குடும்பத்தினர்.**

# ஒரு மனிதப் பண்பாளன் பணிபுரிந்தபோது...



வட மாகாணத்தின் கல்வி வலயங்களில் தலைமையானது யாழ்ப்பாணக் கல்வி வலயமாகும்.

ஒரு காலத்தில் வட மாநிலக் கல்வித் திணைக்களமாக யாழ்ப்பாணக் கல்வி வலயம் இருந்த காரணத்தாலும் யாழ்ப்பாண கல்வி வலயம் வரலாற்று முக்கியத்துவத்தை பெற்றுக் கொள்கிறது.

இத்தகைய பெருமை மிகுந்த யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளராக இருந்து அந்தப் பதவிக்குப் பெருமை சேர்த்த நடராஜா தெய்வேந்திரராஜா அவர்கள் இன்று அகவை 60ஐ நிறைவு செய்து பணியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

பொதுவில் தனித மனித ஆளுமைகள் வித்தியாசமானவை. இந்த உலகம் முழுமையிலும் உன்னதமான மனிதர்கள் என இனங்கண்டதற்குள் அவர்களின் தனிமனித ஆளுமைகளும் மற்றவர்கள் மீது அவர்கள் அன்பு பாராட்டுகின்ற பெருந்தன்மையும் முதன்மை பெறுகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அவர்கள் ஓர் உன்னதமான - மனிதநேயம் மிகுந்த - அனைவரையும் உயர்வாக மதிக்கின்ற பண்பாளர் என்பது அவர் குறித்த பதிவாகும்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இருக்கக்கூடிய அத்தனை பாடசாலைகளையும் உயர்வாக மதித்த அவரின் பெருந்தன்மை அவர் மீதான மரியாதையை கல்விச் சமூகத்தில் ஏற்படுத்தியது.

புகழ்பூத்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இருந்த அவரின் ஆளுமை, யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவியிலும் பிரவாகித்ததைக் காண முடிந்தது.

அதிபர் கூட்டங்களை நடத்திய அவரின் முகாமை மிகவும் நுட்பமானதும் - ஏனையவர்கள் பின்பற்றக் கூடியதுமாகும்.

பொதுவில் அதிபர் கூட்டங்களில் கல்வி அதிகாரிகளின் கருத்துக்கள் மேலோங்கி நிற்பதுடன் கல்வி அதிகாரிகளின் கருத்துக்கள் கட்டளைகளாக அதிபர்களைச் சென்று சேர்வதே வழக்கம்.

ஆனால் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அவர்கள் நடத்தும் அதிபர் கூட்டம் வித்தியாசமானது. அதிபர்களின் கருத்துக்களே கூட்டத்தில் முதலிடமாக இருக்கும். கூட்டத்தின் நிறை குறைகளை அதிபர்கள் அடுத்த கூட்டத்தில் சுட்டிக்காட்டுவதற்கான ஏற்பாட்டு ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தவிர, அதிபர்களின் நற்சிந்தனை; ஓய்வுபெற்ற அதிபர்களின் கருத்துக்கள் என்றவாறு அதிபர் கூட்டத்தை ஆளுமை விருத்திக் கூட்டமாகவும் மனித நேயத்தை விருத்தி செய்வதற்கான களமாகவும் ஆக்கிய அவரின் முகாமை அனைத்து அதிபர்களையும் அவர்பால் ஈர்த்துக் கொண்டது.

மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு உரிய மதிப்பைக் கொடுக்கின்ற பெருந்தன்மை பணிப்பாளர் தெய்வேந்திரராஜாவிடம் பரவியிருந்தமை அவரின் உன்னதமான பண்பின் வெளிப்பாடாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இறை நம்பிக்கையும் தர்மத்தின் மீதான பற்றுறுதியும் யார்க்கும் பழுது நினைக்காப் பக்குவமும் அவரிடம் மிகுந்திருந்ததினால், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா அவர்களின் சேவைக்காலம் கடமையை தெய்வீகமாகக் கருதிப் பயணிக்கும் ஒரு புதிய பயணத்தை ஏற்படுத்தியது.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற, நியாயம் தவிர்ந்த வேறு எதற்கும் அஞ்சாத கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா அவர்கள்,

கடந்த 30 ஆண்டு கால கல்விச் சேவையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக, யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளராக இவற்றுக்கு முன்பாக தென்பகுதியில் வகித்த கல்விச் சேவை எனப் பல பரிமாணங்களில் கல்விப் பணிபுரிந்த தெய்வேந்திரராஜா அவர்கள் இன்று அகவை 60ஐ நிறைவு செய்யும் இவ்வேளையில் அவரின் மனிதநேயத்தை, இறைநம்பிக்கையை, மற்றவர்களை மதிக்கின்ற அன்பின் விளைச்சலை பகிர்ந்து கொண்ட பாக்கியசாலிகளான நாமும் அவரை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

**- என்.விஜயசுந்தரம்**

# வடக்கிலுள்ள அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்கப்பட வேண்டும்

## வடக்கு மாகாண சபை முன் தொடர் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 676 பேர் தமக்கான நியமனங்களைக் கோரி பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அந்த வகையில் தொண்டர் ஆசிரியர்கள் 182 பேருக்கும், அதற்கு சமமான காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 142 ஆசிரியர்களுக்கும் கடந்த மாதம் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3.2 இற்குரிய நியமனக் கடிதம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், அனைவருக்கும் ஒரே நேரத்தில் நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஏனைய தொண்டர் ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து மேற்குறித்த நியமனம் இடை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நியமனத்துக்குள் உள்வாங்கப்படாத ஆசிரியர்கள், மேற்குறித்த நியமனத்தை நிறுத்த வேண்டும் என்றும் அனைவருக்கும் ஒன்றாக சேர்த்து தான் நியமனம் வழங்க வேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம் காலை தொடக்கம் வடக்கு மாகாண சபை முன்றலில் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அதேபோன்று இரண்டாவது நாளாக நேற்று வடக்கு மாகாண சபை முன்றலில் நின்று சபை அமர்வுக்கு வந்த உறுப்பினர்களிடம் தமது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அத்துடன் தமக்கான சரியான தீர்வு சபையில் எடுக்கப்படாது விட்டால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

அதன் விளைவாக நேற்றைய சபை அமர்வில் குறித்த விடயம் கலந்துரையாடப்படுவதையும் அது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதையும் நேரடியாக பார்வையிடுமாறு தொண்டர் ஆசிரியர்கள் 5 பேர் மாகாண சபை அமர்வினை பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அதில் குறித்த விடயம் கலந்துரையாடப்பட்டு ஏப்ரல் மாதத்துக்குள் நிரந்தர நியமனம் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற கருத்தினை அவைத் தலைவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் தமக்கு அந்தக் கருத்தில் உடன்பாடில்லை எனத் தெரிவித்து தொடர்ச்சியான போராட்டத்தில் ஆசிரியர்கள் ஈடுபட்டனர். (இ-9)

# பழைய வாய்க்கால் பகுதியில் 12 மோட்டார் குண்டுகள் அதிரடிப் படையினரால் மீட்பு



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பழைய வாய்க்கால் பகுதியில் 12mm மோட்டார் குண்டுகளும் அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் நேற்று விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் வெடிகுண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் குறித்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. (இ-9)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில் எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தேப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்திபுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2341)
மங்களபதி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புகள்
## CERTIFICATE IN PHARMACY

மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மருத்துவ பிரதிநிதிகளுக்குமான ஆறு மாத கால பயிற்சி நெறி சித்திரை 2018 தொடக்கம் புரட்டாதி 2018வரை யாழ்ப்பாணக் கல்லூரி, (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது. இந்த பயிற்சிநெறி பயிலுவதற்குரிய குறைந்தபட்ச தகைமை GCE O/L இல் ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சாதாரண சித்தி இருக்க வேண்டும். வயது எல்லை இல்லை. 2018ம் ஆறு மாத இறுதியில் பரீட்சையில் தோற்றி சித்தி அடைய வர்களுக்கு CERTIFICATE IN PHARMACY தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்த பயிற்சிநெறியில் பெறும் அறிவு Pharmacy Technicians Course படிக்க உதவியாக இருக்கும். மேலும் வெளிவாரி மருந்தியலாளர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் இந்த பயிற்சிநெறி மூலம் மருந்தகங்களில் பணிபுரிவதற்குரிய போதிய அடிப்படை அறிவை பெறக்கூடியதாக இருக்கும்.

பயிற்சி வகுப்புகள் புதன்கிழமைகளில் காலை 08.30 - 12.30 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 12.30 - 16.30 மணிக்கும் நடாத்தப்படும்.

நீங்கள் 04/04/2018ம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சமுகமளித்து மேற்படி பயிற்சிக்கான பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிநெறியை ஆரம்பிக்கலாம் அல்லது 08/04/2018 ஞாயிற்றுக்கிழமை சமுகமளித்து மேற்படி பயிற்சிக்கான பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிநெறியை ஆரம்பிக்கலாம். மாதாந்த பயிற்சி கட்டணம்- ரூபா 2000/=

மேலதிக தகவல்களுக்கு:- **மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர் T.P - 077 625 6292**

## Golden Eagle. K.T. (Pvt) Ltd
### பதவி வெற்றிடங்கள்

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஆண்
2. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - பெண்

ஆவணங்கள் - கிராம அதிகாரியின் நற்சான்று, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், க.பொ.த (சா/த),தே.அ.அ

நேர்முகத் தேர்வு 02.04.2018, 03.04.2018 மற்றும் 04.04.2018

**சம்பளம்** - நாள் ஒன்றுக்கு 12 மணித்தியாலங்களுக்கு குறைந்தது ரூபா 700/= + EPF, ETF வழங்கப்படும்

**758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## சோமாஸ்கந்தவின் வாழ்த்து



எமது வலயக் கல்விப் பணிப்பாளரும் தர்மகர்த்தா சபைத் தலைவருமாகிய

**உயர்திரு. நடராஜா தெய்வேந்திரராஜா**

**அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி**

எமது தர்மகர்த்தா சபைத் தலைவராக கடமையாற்றி தர்மகர்த்தா சபையினால் பராமரிக்கப்படுகின்ற சொத்துக்களில் இருந்து முறையானதொரு வருமானத்தினைப் பெற்று எமது கல்லூரிக்கு பயன்படும் வகையில் ஏற்பாடுகளைச் செய்து வினைத்திறனான தலைவராகச் செயற்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கு மணிவிழா காணுகின்ற இன்றைய நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2017)

**தர்மகர்த்தா சபை. யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

## அகவை அறுபதில் பாதம் பதிக்கும் கல்வி மேதாவளியைப்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**தனி மனித அகமியைப் புனிதப்படுத்தும் ஆசிரியராய் திரள் மாணவரை ஆற்றுப்படுத்தும் அதிபராய் அறிவுப் புலத்தைக் கட்டியெழுப்பும் கல்விப் பணிப்பாளராய் திகழ்ந்து பணிநிலை ஓய்வு காணும்**

### உயர்திரு. நடராஜா தெய்வேந்திரராஜா (SLEAS II)

**அவர்களின் உன்னத சேவையினை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

ஆசிரியர்கள் கற்று மகிழ்ந்த ஐந்தாவது வேதம்
அறுபதாவது அகவையிலே பதிக்கிறது பாதம்
கல்வி சூழ் உலகு ஒளிர அவதரித்த தெய்வேந்திரமே!
இதயக் குகை திறக்க வல்ல "சீசேம்" மந்திரமே!
எல்லோரையும்போல உங்களுக்கும்
பத்துவிரல்தான்!
ஆனாலும் ஒவ்வொன்றிலும்
வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்தான்!

வேகம் என்ற சொல் அகராதியை அடைந்தது
உங்களால்தான் என்பதே எங்களின் ஊகம்
மும்மொழி ஆளுமை மிகு புதல்வரே
ஹாட்லியின் முன்னாள் முதல்வரே!
யாழ்.கல்வி வலயத்தில் நிகழ்த்தினீர்கள்
மாட்சி மிகு ஆட்சி!
பதிவான சாதனைகளே தக்க சாட்சி

நேர்மை, தூய்மை, தியாகம், புதுமை, எளிமை
என்னும் பஞ்ச தத்துவம் கலந்தது
உங்களின் கனரக முகாமைத்துவம்!
அதிகாரத்தில் விளைந்ததல்ல
அதிமதுரத்தில் விளைந்தது
உங்கள் ஆளுகையின் தனித்துவம்!

வாரி வழங்கும் உங்கள் பண்பினைக் கண்டால்
கர்ணனே நிற்பான் கண்கலங்கி...
"ஓ" வகைக் குருதி போல நீங்கள் பொதுவழங்கி


நீரிழிவு நோயாளிகள் அஞ்சும் வகையிலே
தித்திக்கும் வார்த்தைகளையே உச்சரிப்பீர்கள்
சிறு தவறைக் கண்டாலும்
வேரோடு களையுமாறு எச்சரிப்பீர்கள்

சுறுசுறுப்பாக இயங்குமாறு
சுற்றியுள்ளோரை எப்போதுமே நச்சரிப்பீர்கள்
உங்களின் அன்பு
இதயத்தைப் பாதுகாக்கும்
இருபத்தைந்தாம் விலா என்பு

ஆழிதுயில் தெய்வம் நிகர்த்தவரே!
உங்கள் பாதத்திலே சிரம் தாழ்த்துகின்றோம்
ஊழிவரை வாழியென வாழ்த்துகின்றோம்.

**தங்களின் கீழ் பணிபுரிந்த வடமராட்சி ஆசிரியர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
### யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை



**திரு. சிவசுப்பிரமணியம் மதிபாலன்**
அதிபர் (SLPS III)



**திருமதி கௌரி ஜெகநாதன்**
(SLTS 2 I)

Best Wishes

மேற்படி எமது பாடசாலையின் அதிபர் திரு.சி.மதிபாலன் முதுகல்விமாணி (M.Ed) பட்டத்தையும் ஆசிரியர் திருமதி கௌரி ஜெகநாதன் கல்வி மாணிப் பட்டத்தையும் (B. Ed) இன்று கொழும்பு BMICHஇல் நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் பெற்றுக் கொள்வதையிட்டு மகிழ்வடைவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை.**

(3412)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



27.03.2018 நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட

### நல்லதம்பி சிவசங்கர்
**(சாவல்கட்டு, ஆனைக்கோட்டை)**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று மக்கள் சேவையாற்ற இறைவன் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**சி.நாகையா (J.P)**
**ஓய்வுபெற்ற அதிபர், நவாலி.**

(3418)

# விஷ விவகாரம்;இருபது நாடுகளிலிருந்து ரஷ்ய தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

(வோஷிங்டன்)

ரஷ்ய உளவாளியை விஷம் வைத்து கொல்ல முயன்ற விவகாரத்தில் அமெரிக்காவை தொடர்ந்து 20 நாடுகள் ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்ற உத்தரவிட்டுள்ளன.

முன்னாள் ரஷ்ய உளவாளி செர்கெய் ஸ்க்ரியாலும், அவரது மகளும் இங்கிலாந்தில் நச்சுத் தாக்குதலுக்கு ஆளாகினர். இந்த நடவடிக்கையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீது புகார் அளிக்கப்பட்டது. அதற்கு ரஷ்யா மறுப்பு தெரிவித்துள்ளது.

இருந்தும் இங்கிலாந்து தன் நாட்டில் இருந்து ரஷ்ய தூதரக அதிகாரிகள் 23 பேரை வெளியேற்றியது. ரஷ்யாவுடனான ஒப்பந்தங்களை இரத்து செய்தது. இந்த நிலையில் அமெரிக்காவும், ரஷ்யா மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 60 ரஷ்ய தூதரக அதிகாரிகளை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றி உள்ளார். உளவுத்துறை அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ள அவர்கள் 7 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தை தொடர்ந்து உக்ரைன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், போலந்து, செக் குடியரசு, லுதுவேனியா, நெதர்லாந்து, டென்மார்க், இத்தாலி, அல்பேனியா, ஸ்பெயின், சுவீடன், கரோடியா, ருமேனியா, பின்லாந்து, எஸ்டோனியா, லாத்வியா ஆகிய 20 நாடுகளும் ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றி உத்தரவிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# அரசியல் பலத்தால் சாரதியை தாக்கிய கணவன், மனைவிக்கு நேர்ந்த நிலை

## மாகாண சபை உறுப்பினர் கம்பி எண்ணுகிறார்

(கொழும்பு)

தென்மாகாண சபை உறுப்பினர் எம்.கே.கசுன் மற்றும் அவரது மனைவி ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




கடுவலை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தென்மாகாண சபை உறுப்பினர் கடந்த 10 ஆம் திகதி சாரதி ஒருவருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவரை தாக்கியதோடு, மனைவியுடன் இணைந்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளார்.

பின்னர் அன்று மாலை குறித்த இருவரும் பொலிஸ் நிலையத்தில் சென்று சரணடைந்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

சரணடைந்த போது கைத்துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் ரவைகளையும் பொலிஸ் துறையினரிடம் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கைத்துப்பாக்கியை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரம் கடந்த வருடத்துடன் நிறைவடைந்திருப்பதனையும் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி குறித்த இருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதற்கமையவே நேற்று குறித்த இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதியைப் பதவி நீக்கிவிட்டு பிரதமராவதே மகிந்தவின் திட்டம்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

"கடந்தகாலத்தில் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் பின்வாசல் வழியாக மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற மேற்கொள்ளப்படும் சதி முயற்சியே, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உண்மையான திட்டம்" என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு விசேட நேர்காணல் ஒன்றினை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உண்மையான நோக்கம் ஜனாதிபதியையும், சபாநாயகரையும் இலக்கு வைத்து நடத்தப்படும் சதித் திட்டமே.

அதாவது ஜனாதிபதிக்கு பாதுகாப்பாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து அகற்றிவிட்டு, தங்களுக்கு சாதகமாக செயற்படும் பிரதமர் ஒருவரை நியமித்து ஜனாதிபதியையும் மாற்றி அடுத்த தேர்தலைக் குறிவைத்து நகர்த்தப்படும் செயலாகவே இது நோக்கப்படல் வேண்டும்.

அதேபோன்று ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, மகிந்த ராஜபக்ஷ போன்ற ஒருவர் பின்வாசல் வழியாக பிரதமர் பதவியில் அமர்ந்து, இழந்த தங்கள் அதிகாரங்களை மீண்டும் கைப்பற்றவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் இவ்வாறான சதி முயற்சிகள் எப்போதும் நிறைவேறாது என்பதனையும் நான் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுற்றுலாத்துறை ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு யாழ். கிறீன்கிறாஸ் மண்டபத்தில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராகவடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-7)

# 10 வருடங்கள் சிறைவாசத்தின் பின்

# தமிழ் அரசியல் கைதிகள் இருவர் நேற்று உயர் நீதிமன்றால் விடுதலை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக குற்றஞ்சாட்டி கைது செய்யப்பட்டு கடந்த பத்து வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் இருவர், குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு, யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை சுதந்திரத் சதுக்கத்தில் வைத்து கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ஆதித்தியன் மற்றும் கோகுலநாத் ஆகிய இருவரும் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு சந்தேக நபர்களுக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், சந்தேக நபர்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. நவராசா நீதிமன்றில் தொடர்ச்சியாக ஆஜராகி வந்தார். இந்நிலையில், நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், குற்றச்சாட்டின் அடிப்படையில் சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட வேண்டுமாயின் குறைந்த பட்சம் இருவர் இணைந்து செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், சந்தேக நபர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்திருந்தமை நிருபிக்கப்படவில்லை என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசாவினால் வாதம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குற்றத்தை நிருபிக்க போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தை தெரிவித்த உயர் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபர்கள் இருவரையும் குற்றச்சாட்டில் இருந்து விடுவித்து விடுதலை செய்துள்ளார். (இ-7)



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் "தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்" முத்தமிழ் மன்ற முத்தமிழ்விழா அண்மையில் கல்லூரி அதிபர் அருட்தந்தை அ.பீ.திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தேவராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். வலய உதவிப் பணிப்பாளர் (தமிழ்) சிவனுபூபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் "மந்தமாருதம்" இதழ் வெளியிடப்பட்டது.

# இராசி பலன்

**மீனம்:** தேகநலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள்.

**மேடம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சிதரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பொது நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு, கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்<br>காலை 9.21 மணிக்கு<br>சிங-சந் | | ராகு, |
| கேது | | | சந் |
| சனி, செவ் | குரு | | |

**28.03.2018**

பங்குனி 14, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

துவாதசி முன்னிரவு 10.50 மணிவரை

ஆயிலியம் முற்பகல் 9.21 மணிவரை

சுபநேரம் 4.44-6.14 மணிவரை

இராகுகாலம் 12.14-1.44 மணிவரை

வளவன்

**கடகம்:** உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த காரியத்தில் தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், குடும்பச்சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.


**தனுசு:** குடும்பத்தினரிடையே நிலவி வந்த குழப்பங்கள் அகலும், தன்நம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்தகாரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.





யாழ்.வளலாய் அ.மி.த.க.பாடசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

# தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்க ஜனாதிபதியிடம் யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கிளிநொச்சியைச்சேர்ந்த அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரன் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகளாக சிறையில் இருக்கின்றார். மிக அண்மையில் சுகயீனம் காரணமாக அவரது மனைவி இறந்துவிட்டார். ஆனந்த சுதாகரனுக்கு 12 வயதில் மகனும் 10 வயதில் மகளும் உள்ளனர். தாயையும் இழந்து தந்தையும் சிறையில் இருப்பதனால் அந்தப்பிள்ளைகளின் அன்றாடத்தேவைகளைப் பார்ப்பதற்கோ அவர்களின் துன்பதுயரங்களை களைவதற்கோ யாருமில்லாது தவித்து வருகின்றனர். கடந்த காலங்களில் நீங்கள் மிகப்பெருமிதத்துடன் பலருக்கு மன்னிப்புக்கொடுத்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியூட்டியுள்ளீர்கள். உங்களைக் கொல்ல வந்த இளைஞனுக்குக்கூட மன்னிப்பு அளித்து புனர்வாழ்வளித்து இந்த சமூகத்தில் அவர் கௌரவமாக வாழ வழிசமைத்துள்ளீர்கள். அப்பாவிகளான இரு குழந்தைகளின் அபிலாசைகள் மற்றும் தனிமையினை கருத்திற்கொண்டு அவர்களின் தந்தையான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு அளிக்குமாறு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வினயமாக வேண்டிக் கொள்கின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




யாழ். வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் அமரர் கணநாத் நினைவாக அண்மையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.




கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2015/2016 கல்வியாண்டில் கற்கைநெறியை மேற்கொண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பன்னிரண்டு ஆசிரிய பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணிய சங்கம் பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்க தலைவர் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் புதிய நிர்வாக சபை தெரிவு இடம் பெறும் என செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## யாழ்.செய்திகள்

## பண்ணிசையரங்கு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணகவெட்டி அம்மன் ஆலய மஹோற்சவம் கடந்த 19ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை 29ஆம் திகதி நடைபெறும் தேர்த்திருவிழாவில் முற்பகல் 11 மணி தொடக்கம் ஆலய முதன்மை மண்டபத்தில் "பண்ணிசைப் பாவலன்" கலோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம் பெறும்.

• • • • • • • • • • • • •

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் பங்குனி உத்தர மஹோற்சவ பெருவிழா கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.


நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள தேர்த்திருவிழாவில் விசேட நிகழ்வாக சிவனடியார் மண்டபத்தில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம் பெறும். (இ)

## பிரார்த்தனைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவராகவும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவராகவும் விளங்கிய கந்தையா நீலகண்டன் காலமானதை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் அஞ்சலி பிரார்த்தனைக் கூட்டம் இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும்.

இதில் சகல சமய சமூக ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)




வேர்ட் விஷன் நிறுவன ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதேசத்தின் நீர் வழங்கல், கல்வி வசதிகள், மீன்பிடி விவசாயம், கால்நடைவளர்ப்பு, சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.





கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வாளிச் சின்னத்தில் போட்டியிட்டு நான்கு உறுப்பினர்களைப் வெற்றிகொண்ட சுயேட்சைக் குழுவினருடைய சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெற்றது.

# மணமகள் தேவை

இத்தாலியில் வசிக்கும் P.R. 1984 இல் ரேவதி மீன இராசியில் 7 இல் செவ்வாய் (8) கி.பா. 49 ஐக் கொண்ட மகனுக்கு அத்தம், திருவாதிரை, மிருகசீரிடம், உத்திரட்டாதி நட்சத்திரங்கள் கொண்ட 1988 இன் பின் பிறந்த மணமகள் தேவை.

(3386)

தொடர்பு:-எஸ்.வி.சதாசிவம் ஜே.பி.
சாவகச்சேரி.
077 636 5786

# நம்பிக்கை இழக்க வேண்டாம்.

**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**
**எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.**

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

யாழ்ப்பாணம்: **077 900 8776**
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியா: **024 324 4444**
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின்

# மணி விழா வாழ்த்து



CONGRATULATIONS!

உயர்திரு.

## ந.தெய்வேந்திரராஜா

வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.
(தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முன்னாள் போஷகரும் இந்நாள் நிபுணத்துவ ஆலோசகரும்)

கல்விப் பெருந்தகை நீர்
கற்றவர் தாம் பெற்ற நலம்
முற்றும் சிறந்தோங்க
முன் நின்றுழைத்தீர்கள்
கடமை சீர் பேர் துலங்க
கனிவோடு அன்பு செய்தே
புனிதம் பெருக்கிக் கல்விப்
புலம் சிறக்கப் பணி செய்தீர்
தாய் தமிழ் வாழ் மண் மகிழும்
தகைமை மிகு பணிப்பாளர்
ஓய்வினிக்கும் நற்சேவை
உயர்வொழுக்கம் கல்வி வளம்
தூய்மை நலம், தொழும் வாழ்க்கை
தொடர நிதம் வாழ்த்துகின்றோம்.

(3408)

**வாழ்த்துவோர்:**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.குலசிங்கம் திலீபன்

**NDT(Merit), M.A(Pub.Admin.),PGDE,MEd,PGDEM(Merit),SLPS-2**

**கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் அதிபர் திரு.குலசிங்கம் திலீபன் அவர்கள் 15.03.2018 அன்று பத்தரமுல்ல கல்வியமைச்சில் நடைபெற்ற வைபவத்தில் அதிபர் தரம்-2 (SLPS-2) பதவியுயர்வு நியமனத்தை கல்வியமைச்சர் கௌரவ அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். திரு.குலசிங்கம் திலீபன் அவர்கள் மென்மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.**

(3407) **-நண்பர்கள்-**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்







**திரு.தி.சாந்தகுமார்**

**திருமதி.க.பிரதீஸ்வரன்**

**திருமதி.த.அம்பிகைவாகன்**

**இன்று(28.03.2018) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்று வாண்மை விருத்தியுறுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்கள் திரு.தி.சாந்தகுமார், திருமதி.த.அம்பிகைவாகன் அவர்களையும் 20.02.2017 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்ற ஆசிரியர் திருமதி. க.பிரதீஸ்வரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சங்கம், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

(3382)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்**
**28.03.2018 இன்று நடைபெறும் கல்வி முதுமாணி, கல்வி இளமாணி பட்டங்களைப் பெற்றுக் கொள்ளும்**
**எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**
**இவர்கள் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.**



(3356)

**அதிபர்.திரு.மரியநாயகம் மரியராசா**
**(B.Com,HNDE, PGDE) கல்வி முதுமாணி M.Ed**

வாழ்த்துவோர்,
கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

**ஆசிரியர் திருமதி.கொன்சியரூபராணி கிருபானந்தன்**
**(SP.Trd.in Primary) கல்வி இளமாணி B.Ed**








முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வாக நேற்று முன்தினம் ஆலயத்தில் கிரியைகள் இடம்பெற்று நேற்று முதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு எண்ணெய் சாத்த இலங்கையின் பல பாகங்களிலும் சர்வதேச நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வருகை தந்து கலந்துகொண்டு எண்ணெய் சாத்தி வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் தீப ஆராதனையில் அம்மனின் திருவுருவம்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் நேற்று முன்தினம் ஆரம்ப யாகபூசை வழிபாட்டின்போது அம்மனுக்கு கர்மாரம்பம் தீப ஆராதனையின் போது அம்மனின் திருவுருவம் தென்பட்டு அங்கிருந்த பக்த அடியார்களுக்கு அருள்பாளித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இடம்பெற்றுவரும் வற்றாப்பளை அம்மனின் ஆலய திருவிழாவின்போது ஒவ்வொரு விதமாக அம்மனின் அற்புதக் காட்சிகள் தென்படுவது வழமையாகும்.

மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவினைத் தொடர்ந்து அம்மனின் ஆலயத்தில் 45நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஆத்மீக ரீதியில் தொடரும் கேப்பாபிலவு மக்களின் போராட்ட இடத்திற்கு மனிதவுரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் வருகை



(பனிக்கன்குளம்)

இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நில மீட்பு போராட்டம் ஒரு வருடத்தை தாண்டிய நிலையில் 393 ஆவது நாளாக இன்றும் இராணுவ முகாமிற்கு முன்பாக அமைக்கப்பட்ட கொட்டகையினுள் தொடர்கின்றது.

104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து கேப்பாபுலவு மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் தமக்கான தீர்வினை அரசாங்கம் முன்வைக்காத நிலையில்கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் ஆத்மீக ரீதியாக சர்வமத பிரார்த்தனைகளை முன்னெடுத்து வருகின்றனர்

இந்நிலையில் நேற்று முன்தினம் மக்களின் போராட்ட இடத்துக்கு வந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மக்களது பிரச்சினைகள் மக்களுக்கு இராணுவம் மற்றும் ஏனைய தரப்புக்களால் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் போன்றவற்றை கேட்டறிந்ததோடு மக்களுடன் கலந்துரையாடினர்.

கேப்பாபுலவு மக்களின் அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட் டுள்ள ஆறுமுகம் வேலாயுதபிள்ளை இதன போது தெரிவித்துள்ளார். (2-281)




# கத்திமுனையில் கொள்ளையிட முயன்றவேளை அயலவர்களின் கூக்குரலையடுத்து தப்பியோட்டம்

## கிளிநொச்சியில் கொள்ளையர்கள் அட்டகாசம்


(பரந்தன்)

கிளிநொச்சி பன்னங்கண்டி கிராமத்தில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் வீட்டின் உரிமையாளரை அழைத்து கத்தி முனையில் கொள்ளையில் ஈடுபட முயன்ற வேளை அயலவர்களின் கூக்குரலையடுத்து திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் பன்னங்கண்டி கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

பன்னங்கண்டியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் உரிமையாளரை அழைத்து அவரை கத்திமுனையில் மிரட்டி கொள்ளையில் ஈடுபட்டபோது அயல் வீடுகளிருந்து சத்தங்கள் எழும்பியதையடுத்து திருடர்கள் தப்பிசெல்ல முயன்றபோது அயலவர்கள் விரட்டிசென்று அவர்கள் பயணித்த உந்துருளியை பிடித்த போது அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களான வாள்கள், கூரிய கத்திகள் மற்றும் உந்துருளியையும் விட்டு தப்பிசென்றுள்ளார்கள்.



இது தொடர்பாக பன்னங்கண்டி மக்கள் பொலிஸாருக்கு அறிவித்த போது பல மணிநேரம் சென்ற நிலையில் அப் பகுதிக்கு பொலிஸார்வருகைதந்தமையால் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கொள்ளையர்கள் விட்டு சென்ற தடயப்பொருட்களை கொண்டு சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (2-312)

# 13 உணவகங்கள் மீது திடீர் சோதனை 2 உணவகங்கள் தற்காலிகமாக மூடல்

## கிளிநொச்சி சுகாதார பிரிவினர் தொடர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி சுகாதார சேவை வைத்திய அதிகாரியின் பணிப்புரைக்கமைவாக கரைச்சி பகுதியிலுள்ள 13 உணவகங்கள் மீது சுகாதார பிரிவினரும் , பொலிசாரும் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய திடீர் சோதனையில் இரு உணவகங்கள் சுகாதார விதி முறைகளை மீறி செயற்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இரு உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் 11 உணவகங்களுக்கு 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரையில் தண்டப்பணம் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டுள்ளது.

இதே வேளை நேற்றையதினம் 10 உணவகங்கள் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டு ஒரு உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் 9 உணவகங்களுக்கு குற்றப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக கிளிநொச்சி சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரியின் பணிப் புரைக்கு அமைய உணவகங்கள் மீது தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# மரப்பாலத்தை புனரமைத்து பயணிப்பதற்கு உதவுங்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணிக்கபுரம் கிராமத்தில் இருந்து மு/பாரதி வித்தியாலயத்துக்கு செல்லும் வீதியில் காணப்படும் மரப் பாலத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்

யுத்தத்திற்கு முன்பும் சரி யுத்தம் முடிவடைந்து மீள் குடி யேறிய இன்று வரையும் சரி இந்த பாலம் புனரமைப்பின்றி காணப் படுவதால் பாடசாலை மாணவர் கள் முதல் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழைகாலத்தில் குறித்த வீதிவழியாக செல்லமுடியாது எனவும் வேறுபாதைகள் ஊடாகவே செல்வதாகவும் இந்த பாலத்தை உரிய முறையில் புனரமைத்து பாடசாலை மாணவர்கள் மக்களது போக்குவரத்துக்கு உதவுமாறு கோரப்படுகின்றது. (2-281)

# நாளொன்றுக்கு 6ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது

## மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு ஆறாயிரம் லீற்றர் வரையான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்குப்பிரதேச செயலாளர் பி.சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட எருவில், சிறாட்டிகுளம் ஆகிய பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரிடம் தொடர்புகொண்டு வினவிய போது,

மாந்தைகிழக்குப்பிரதேச சபையில் குடிநீர்த்தேவைகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுமிடத்து அவற்றுக்கான குடிநீரை விநியோகித்து வருகின்றோம்.

தற்போது கற்குவாறி, விநாயகபுரம் பாடசாலை, விநாயபுரம், பாண்டியன்குளம்50வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நாளொன்றுக்கு தற்போது ஆறாயிம் லீற்றர் குடிநீர் தேவைப்படுகின்றது.

எங்களிடம் இருக்கின்ற கிணற்றிலிருந்து சராசரி மூவாயிரம் லீற்றர் குடிநீர் மாத்திரமே பெற முடிகின்றது. அத்துடன் மேலும் தேவை அதிகரிக்கும் பட்சத்தில் குடிநீரைப்பெற்றுக்கொள்ளும் பொருட்டு தனியார் கிணறு ஒன்றினையும் தயார் நிலையில் வைத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட

# ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு இந்து குருமார் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஆனந்த சுதாகரனை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரி மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கடிதம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டது. மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்ம குமாரக் குருக்கள் மற்றும் செயலாளர் பிரம்மசிறி மனோ ஐங்கரசர்மா குருக்கள் ஆகியோர் இணைந்து கையொப்பமிட்டு குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் அண்மையில் கிளிநொச்சியில் இரு பிள்ளைகளின் தாய் உயிரிழந்தார். அவரது கணவரான அரசியல் கைதி ஆனந்த சுதாகரனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவரின் இரு குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் குறித்த இரு குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாட்டின் ஜனாதிபதியான உங்களின் அதிகார தத்துவத்தின் பிரகாரம் ஆனந்த சுதாகரனுக்கு கருணை அடிப்படையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-281)




# கையெழுத்து சேகரிப்பு



(பனிக்கன்குளம்)

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனை நிபந்தனையற்ற பொதுமன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யக்கோரி முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளுவர்புரம், தேராவில் மாணிக்கபுரம், இளங்கோபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள இளைஞர்களும் மூங்கிலாறு பகுதி மகளிர் அமைப்புக்களும் இணைந்து நேற்று முன்தினம் மாலை கையெழுத்து சேகரித்து புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (2-281)

# முகமாலை,இந்திராபுரம் கிராமங்களிலுள்ள 250குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையினரின் ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட முகமாலை, இந்திராபுரம் ஆகிய கிராம மக்களுக்கு நுளம்பு தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு வழங்கும் வகையில் நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் முகமாலை பொதுநோக்கு மண்டபத்தில் முகமாலை கிராம அலுவலர் கே.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முகமாலை, இந்திராபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கே இந்த நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வின் போது, கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

இதேவேளை, நேற்று செவ்வாய்க்கிழமை காலை கிளாலி பகுதியில் உள்ள சுமார் 270 குடும்பங்களுக்கு கிளாலி பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மருதமடு குளத்தின் கீழ் 260 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட மருதமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 260 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கைக்கு விவசாயிகள் தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மருதமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் குளத்தின் நீரின் அளவைக்கொண்டு 260 ஏக்கர் வரையான நிலப்பரப்பளவில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் ஏற்கனவே முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டு அதற்கமைவாக விவசாயிகள் தமது நிலங்களை பயிர்ச்செய்கைக்காக தயார்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, மூன்று அல்லது மூன்றரை மாத நெல் விதைப்பது என்றும் கால்நடைகள் கட்டுப்பாடு, நீர் விநியோகம் என்பனவற்றுக்கான திகதிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன எனத்தெரிவித்துள்ள விவசாயிகள் இதன் கீழ் சிறுதானிய செய்கைகள் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (2-315)

# குழாய்க்கிணற்றிலிருந்து நீர் வெளியேறி வீண் விரயமாகிறது

## தடுத்து நிறுத்த முன்வருமாறு கோரப்படுகின்றது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு ஊடாக புதுக்குடியிருப்பு செல்லும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணற்றிலிருந்து பெருமளவு நீர் வெளியேறி வீணாகி வருகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் நீர் ஊற்றுக்கூடிய இந்தப் பகுதியில் உள்ள நீரோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறு பயன்பாட்டிற்கு விடப்பட்ட நாளிலிருந்து நீர் வெளியேறி வருகின்றது.

நீரை வீண்விரயம் செய்ய வேண்டாம் என தெரிவிக்கும் அரசு இவ்வாறு நீர்வீணாவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குழாய்க்கிணறு மூலம் நிலத்தடி நீர் வீணாகும் போது எதிர்காலத்தில் குறித்தபகுதி கிணறுகளிலும் நீர் இல்லாது போய் தாம் பெரிதும் பாதிக்கப்படலாம் என அயலவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். எனவே இந்த விடயத்தை உரிய அதிகாரிகள், திணைக்களத்தினர் கவனத்தில் கொண்டு நீர் விரயமாவதை தடுக்க முன்வருமாறு கோரப்படுகிறது. (2-281)

# நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு அலுவலகமும் தங்குமிட விடுதியும் திறப்பு விழா

(மன்னார்)

விவசாய அமைச்சின் கீழுள்ள வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மன்னார் மாவட்டத்திற்கான நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு அலுவலகமும் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட விடுதியும் மன்னார் மாவட்டத்தின் பள்ளமடு பகுதியில் ஏ-32 வீதிக்கு அருகாமையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

இக்கட்டடம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள், பயனாளிகள், திணைக்கள அதிகாரிகள், அலுவலர்கள் எனப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதுவரை காலமும மன்னார் நகரப் பகுதியில் திணைக்களத்திற்குச் சொந்தமான மண் பரிசோதனை நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த குறித்த பிரிவு அலுவலகம் இடப்பற்றாக்குறை காரணமாக சேவை வழங்குவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத


# உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வகையில் இயங்கி வரும் உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, மல்லாவி நகரப்பகுதி, துணுக்காய் மற்றும் பாலிநகர் பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தகர்கள் பலர் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தினூடாக தண்டிக்கப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார அதிகாரி பணிமனைத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# கடற்றொழிலாளர்கள் 20 பேருக்கு வலைகள்



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கிளாலி கிராமத்தில் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துவரும் 20 பயனாளிகளுக்கு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வலைகள் தேசிய நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் கிராம அலுவலர் பிரபாகரன் தலைமையில் கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தமிழ் மருத்துவத்தில் தேவ அமிர்தம் தேன்

தேனில் பல வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் சிறு அளவில் மாறுபட்ட குணங்கள் கொண்டவை. தேனின் குணத்தைப் பற்றிப் பழம் பெரும் மருத்துவ நூல்கள் விளக்கமாகக் கூறியிருக்கின்றன.

" வாதமெனும் பித்தம் மற்றும்
மாந்தமெனும் நோயை விரட்டும்
ஆறுதலென அரும்பசி ருசியூட்டும்
ஆதலினால் இது கொம்புத்தேனே"
-புலிப் பாணி

மாமரம், வேப்பமரம் போன்ற மரங்களில் உச்சானிக் கொம்பிலே ஒய்யாரமாய் தொங்கும் தேன் கூட்டில் இருந்து எடுக்கப்படும் தேன் கொம்புத் தேனாகும். இதை அருந்தினால் வாத நோய் குணமாகும். பித்த நோய்கள் மாறும் குழந்தைகளுக்குஏற்படும்மாந்தநோய் மறையும் பசியும் ருசியும் அதிகப்படுத்தும்.

" ஐவகை யிருமலீனை விக்கலக்கிப் புண்
மெய்ப்பனவே தீரும் பசியும் வரும்கண்
பொய்யு மிலையிது மலைத்தேனே
உய்யும் மருந்திற் கனுபானமாகும் மாளே"
-தேரையர்

மலைத் தேனை அருந்தினால் ஐந்துவகை இருமல்களும், விக்கல், அக்கிப் புண்கள் வெப்பநோய் ஆகியனவும் குணமாகும். பசியும் ருசியும் ஏற்படும். எவ்வகை மருந்துகளுக்கும் இது ஏற்ற அனுபானமாகும்.

பெரியமலைகளில்உள்ள பாறைகளின் மேல் இடுக்குகளில் கட்டப்பட்ட கூடுகளில் இருக்கும்இந்தமலைத்தேனை குறிஞ்சித் தேன் என்றும் குறிப்பிடலாம்.

உடற் பருமன் குறைவதற்கும் பசி, ருசியை அதிகரிப்பதற்கும் உடல் குளிர்ச்சியை வெப்பப்படுத்தவும், விக்கல், இருமல், சுயரோகம் ஆகியவற்றை குணப்படுத்தவும் மரப்பொந்துத் தேன் சிறந்தது என தேரையர் எனும் சித்தர் பாடலில் விளக்குகின்றார்.

"உளைச் சதை குறையும் வாந்தி
உள்வெப்பம் மாறும் பசியுடன் ருசிகூடும்
கேளப்பா விக்கல் முக்கபரோகம் போம்
ஆமய்யா மரப் பொந்தின் தேனால்"
-வைத்திய அந்தாதி

நாம் வீடுகளில் வளர்க்கும் தேன் கூடுகளிலிருந்து தேனைஎடுத்து அருந்தினால் ஏற்படும் நன்மைகள்.

"கண்ணில் வரும் பூச்சி புழுவெட்டு மாறும்
புன்னோடு புரைகரப்பான் மாறும்
நண்ணிய தீபன மேற்கும் கபரோக இருபாலும்
மண்ணியமனைத்தேன் அருந்து அருமருந்து"
-வைத்திய பரிபூரணம்

புற்றுத்தேனை அருந்தினால் காசசுவாசம் குணமாகும். ஈளை இருமல் குணமாகும். கண்களில் ஏற்படும் நோய்கள் குணமாகும். வாத பித்த கபங்களை சமப்படுத்தும். கூட்டிலிருந்து எடுத்து நாள்பட வைத்திருந்த பழைய தேனில் சிறிது புலிப்புச் சுவை இருக்கும்.

தேன் மிகவும் சுவையாக இருக்கும் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதிலுள்ள மருத்துவ குணங்களை அறிய தேன் அதை விட சுவையாக இருக்கும். இது தாவரங்களின் பூவினின்று தேனீக்களால் சேர்க்கப்பட்ட வஸ்து. இப் பூத்தேனை தேனீக்கள் சேகரித்து கூட்டுக்கு கொண்டு வந்து தன் கூட்டம் அருந்துவதற்காக சேகரிக்கும். சாதாரணமாக காடுகளிலிருந்து வன ஈக்கள் கொண்டு வந்து சேர்ப்பது தான் தேன். இது மலை, மரப் பொந்து கிளைகளின் உச்சி, இலைகளில் கட்டும்.

தேனின் குணம் எவ்வகையான தாவரங்களின் மலர்களில்இருந்துதேனைக்கொண்டு வந்ததோ அதைப் பொறுத்தே அமையும். குறிப்பாக குறிஞ்சி மலர்கள் சம்பங்கி மலர்களில் இருந்து சேகரிக்கப்படும் தேன் ஆகும். எமது மருத்துவத்தின்படி சம்பங்கி மலர் அதிக மருத்துவ பண்புகளை உடையதாக இருக்கும். ஆனால் குறிஞ்சி மலரானது 10 வருடங்களுக்கு ஒரு முறைதான் மலரும் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக காடுகளில், மலைகளிலிருந்துசேகரிக்கப்படும்தேனானது சிறந்த மருத்துவ குணமுடையதாகும். ஏனெனில் பல்வேறுபட்ட மலர்களிலிருந்து சேகரிக்கப்படுவதாகும்.

விலங்கின் பெயர்-Abis mellifica
வகுப்பு-Hymenobtera
ஆங்கிலப் பெயர்-honey
சிங்களப் பெயர்-mee buny

தேன் என்பது தேனீக்களால் முன்பே சேகரிக்கப்பட்ட ஒரு பொருள் ஆகையால் இதனை உண்டால் அது எளிதில் இரத்தத்துடன் கலந்து சக்தியை தருகின்றது. மேலும் உட்புற உடல் வெப்பத்தை சீராக வைத்துக் கொள்ளும்.

தேனில் பல்வேறுபட்ட விற்றமின்கள் , கனிமங்கள் கலந்துள்ளன. உதாரணமாக உயிர்ச்சத்து B, K, C, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச் சத்து, பொட்டாசியம், மக்னீசியம் முதலிய சத்துக்களால் உடலில் ஏற்படும் வளர்ச்சி மாற்றங்களும் உள்ளுறுப்புக்களை பலப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது.

தேனில் ஒரு வித அமிலம் கலந்திருப்பதால் அது பக்ரீரியாக்களை எளிதில் அழித்து விடும் அதனால் தான் தேன் விரைவில் கெட்டுப் போவது இல்லை.நல்ல தேனின் ஆயுட்காலம் 100 வருடங்கள்.

அதாவது சேகரித்து ஒரு வருடத்துக்கு உட்பட்ட தேன் மலத்தை இளக்கும். ஒரு வருடத்துக்கு மேற்பட்ட தேன் மலத்தை இறுக்கும்.

ஆதிகாலத்தில்மக்கள் தமது உணவுப் பொருட்களை பதப்படுத்த தேனை உபயோகித்தனர். இதனால் உணவுப் பொருட்கள் பழுதடையாமல் இருப்பதுடன் நீண்ட காலம் பேணக் கூடியதாகவும் இருந்தது.

அதிக உடல்பருமன் உடையவர்கள் தமதுபருமனை குறைத்துக் கொள்ள வெந்நீரில் தேனும் எலுமிச்சைப் பழரசமும் கலந்து அருந்திவர உடல் பருமன் குறைந்துமேனி அழகு பெறும்.

உடல் இளைத்தவர்கள் உடற் பருமனாக பசும் பாலில் (200 மி.லீ) தேன் (15 மி.லீ) விட்டு அருந்திவர உடல் பருமனாகும்.

நீண்ட நாட்கள் தேனைத் தொடர்ந்து சாப்பிட்டுவர அபூர்வ ஞாபகசக்தி ஏற்படும்.

இருதய பலவீனமானவர்கள் தேனை சாப்பிட்டு வர நாளடைவில் சரியாகிவிடும் நீரிழிவு நோயுள்ளவர்கள் சர்க்கரைக்கு பதில் தேனைப் பயன் படுத்தலாம்.

வாயில் ஏற்படும் நோய்களை வாய்ப்புண், வறட்சி, வெடிப்பு இவைக்கு வாயில் தேனை வைத்திருந்து கொப்பளிக்க வேண்டும். பல் வலிக்கும் சிறந்தது.

இரத்தப் போக்கை கட்டுப் படுத்துவதற்கு தேன் சிறப்பாக பயன்படுத்தப்படுகின்றது.

இரவில்தூக்கமின்மையால் சிரமப்படுவார்கள் படுக்கைக்கு போகும் முன்பு எலுமிச்சைச் சாற்றில் தேனை கலந்து குடித்துவிட்டு படுத்தால் ஆழ்ந்த தூக்கம் உடனே வரும்.

குழந்தை மூன்று வயதாகியும் படுக்கையிலேயே சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தால் குழந்தை படுக்கப் போவதற்கு முன் ஒரு தேக்கரண்டி தேனை வெந்நீரில் கலந்து கொடுத்தால் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் தானாகவே நின்றுவிடும்.

காய்ந்த திராட்சைப் பழங்களை தேனில் ஊறவைத்து ஒரு வாரத்தின் பின்பு எடுத்து தினசரி காலை மாலை 1 தேக்கரண்டி எடுத்துவர உடல் அழகு பெறும். இதயம்வலிமை பெறும்.

அறுகம் புல்லின் வேரைத் தட்டி இட்டுக் கசாயம் செய்து அதில் தேனைக் கலந்து அருந்தினால் உடற் களைப்பு நீங்கும்.

முகம் பளிச்சென மின்னிட முகத்தை கழுவி தேனுடன் சிறிது பாதாம் எண்ணெயும் கலந்து நன்றாகப் பூசி அப்படியே ஊறவிட்டு அரை மணித்தியாலத்துக்கு பிறகு அழுத்தி துடைத்து விட முகத்தில் நல்ல மெருகு ஏற்படும்.

இருமல் மருந்துகள் பலவற்றிலும் தேன் சேர்க்கப் படுவதால் ஆஸ்துமா நோய்களுக்குத் தேன் நல்ல உணவாகின்றது.அதன்கொடுமையை எளிதில் தணியச் செய்கிறது. இரண்டு தேக் கரண்டி தேனை வெந்நீரில் கலந்து சாப்பிட சோர்வு நீங்கும்.

தேன் உண்டு வாழ்ந்து வர ஆயுளை நீடிக்கச் செய்யுமென அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே அறியப் பட்டுள்ளது.

குறிப்பு :நீரிழிவு நோயாளிகள் தூய தேனைப் பயன் படுத்தலாம் தேனிலிருக்கும் Levdose என்னும் சர்க்கரைப் பொருள் சாதாரண குளுக்கோசை விட 1/8 மடங்கு குறைவாகவே அகத்துறிஞ்சப்படுகின்றது.

அத்திப் பழங்களை 48 நாட்களுக்கு தேனில் ஊற வைத்துத் தினமும் ஒன்றிரண்டு சாப்பிட்டுவர குடற் புண் ஆறும் உடலும் வலிமை பெறும்.

பேரீச்சம் பழங்களை மூன்று தினங்களுக்கு தேனில் ஊற வைத்து தினமும் 3 வேளை சாப்பிட்டு வர மூளை நரம்புகள் வலிமை பெறுவதோடு இதயமும் வலிமை பெறும், இரத்தம் ஊறும் மேலும் வாழைப் பழ த்தை தோல் நீக்கி துண் டாக நறுக்கி மூன்று நாட் கள் ஊற வைத்து வேளைக்கு 3 துண்டுகள் வீதம் சாப்பிட்டாலும் மூளையும் , நரம்புகளும் பலப் படும்.கரும்புச் சாற்றில் தேன் கலந்து அருந்திவர உடலுக்கு உடனடியாக வலு கிடைக்கும்.

அன்னாசிப் பழச் சாற்றில்சிறிதளவு தேன் கலந்து அருந்தினால் சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்.

பசும் பாலில் குங்கு மப்பூ இட்டுக் காய்ச்சி அதில் தேன் கலந்து அரு ந்தினால் சுகப் பிரசவம் ஏற்படும். இரத்தம் சுத்த மாகும்.

எலுமிச்சைப் பழத்தை துண்டு துண்டாக்கி தேனில் நனைத்து உட் கொண்டால் கர்ப்பிணிகளு க்கு ஏற்படும் வாந்தி குண மாகும்.

பலாப்பழம் மிகுந்த சத்துள்ள பழமாகும் ஆனால் சிலருக்கு ஒத்துக் கொள்வது இல்லை. ஆனால் பலாப்பழத்தை தேனில் ஊறவைத்து சாப்பிட்டால் ஒவ்வாமையை ஏற்படுத்துவது இல்லை.

குறிப்பு:

பஞ்சாமிர்தம் – இது இந்து ஆலயங்களில் பிரசாதமாக வழங்கும் போது எல்லாவித பழங்களையும் தேனுடன் கலந்தே வழங்கப்படுகின்றது. குளிர் காலத்திலும் எவ் வயதினருக்கும் வழங்கலாம். எவ் வித துர் குணங்களையும் ஏற்படுத்துவதில்லை. எனவே எமது சமய விதிகள் கலாசாரங்கள் என்பன கூட ஆரோக்கிய வாழ்வுக்கான நல்லொழுக்கங்களையும் நற்செய்திகளையும் இளைய சமுதாயத்துக்கு வழங்குகின்றது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


## இந்திய பிரபல ஜோதிடர் வருகை

இலங்கை சக்தி ரிவி, நேத்ரா ரிவி புகழ் பிரபல இந்திய ஜோதிடர் கலைமாமணி தாசரி கே.எஸ்.குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். குறுகிய கால விஜயமாக யாழ்.வந்துள்ள அவர் இன்று முதல் எதிர்வரும் 01.04.2018 ஞாயிறு வரை யாழ்.நல்லூர் யாழ்பாடி விடுதியில் தங்கியிருந்து ஜோதிட ஆலோசனைகள் வழங்குவார்.

திருமணத்தடை, வாழ்வில் முன்னேற்றமின்மை, மண வாழ்க்கையில் முரண்பாடுகள் போன்ற சகல பிரச்சினைகளுக்கும் ஜோதிட ரீதியாகத் தீர்வு வழங்கப்படும்.

076 610 2615 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து ஜோதிடரைச் சந்திக்க முடியும்.

யாழ்பாடி, இல. 49-51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2008)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7401

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: சூரி செவ் 10 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: BSc, MSc/ பொறியியளாளர் அவுஸ்ரேலியா
தொ.இ: B/7402

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 35 சூரி செவ் 8 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்: BSc, MSc/ QS கட்டார்
தொ.இ: B/7403

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா: 24 சூரி செவ் 2 இல்
உயரம்: 164cm
தகைமை/தொழில்: A/Lபிரான்ஸ் குடியுரிமை
தொ.இ: B/7404

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6876

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6884

பிறப்பு: 1987 NON RC
உயரம்: 5’
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6890

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 72 செவ் 7 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்
தொ.இ: G/6891

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் இழைத்துள்ளது

## அமைச்சர் மனோ கவலை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் மனநிலையிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளதாக தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை தலவாக்கலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியின் பங்காளியாக நாம் இருக்கின்ற போதிலும் ஐக்கிய தேசிய கட்சி துரோகம் இழைப்பதால் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு முடிவு ஒன்றை எடுக்க நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் கட்சிக்கும், அந்த கட்சிக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. உள்ளூராட்சி தேர்தலின் போது பல இடங்களில் உறுதியளிக்கப்பட்ட பட்டியலின் அங்கத்துவங்கள் தராமல் ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் செய்துள்ளது.

கொழும்பில் மட்டுமல்லாது நுவரெலியாவிலும் இரண்டு மூன்று ஆசனங்களை எங்களுக்கு தராமல் ஐக்கிய தேசியக் கட்சி ஏமாற்றியுள்ளது.

இதற்கு அவர்கள் உரிய பதில் கூற வேண்டும். உரிய பதில் கிடைத்தால் மாத்திரமே நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தீர்மானிப்போம்.

ஆனால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பயன்படுத்திக்கொண்டு கீழ்த்தரமான, கொள்கையை மாற்றி பணத்திற்கு விலை போய், பதவிக்கு விலை போய் நடக்கும் ஒரு கொள்கை எம் கட்சிக்கு கிடையாது. அதேபோல் இவ்வாறான நல்ல சிந்தனை, நல்ல கொள்கை, நல்ல எண்ணம், கௌரவமான நடத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இருக்க வேண்டும்.

அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இருக்க வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




கேலிச்சித்திரம்

# அண்ணாவை ஆட்சிக்கு கொண்டு வருவோம்

## தம்பி கோத்தபாய உறுதி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவோம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற கோத்தாவுக்கு எதிரான வழக்கு விசாரணையில் கலந்து கொண்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் மீண்டும் பாதாள உலக குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பழைய நிலைமைகள் மீண்டும் உருவாகியிருப்பதாகவும் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் நாட்டை ஆட்சி செய்வது தொடர்பில் கருத்து சொல்வதாகவும் நாட்டை அவ்வாறு கொண்டு செல்ல முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தங்களை சிறைப்படுத்தும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருவதாகவும் தமக்கு அதுபற்றி பிரச்சினை இல்லை எனவும் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவோம் எனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கண்ணீர் காணிக்கை



திரு.
**கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
அவர்கள்

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லக் குழந்தைகளின் வாழ்வியல் நலனுக்காக இல்லத்தின் காப்பாளராக இருந்து பல வழிகளிலும் பேருதவி ஆற்றி வந்தவரும் கண்டாவளை பிரதேச செயலருமான உயர்திரு. கோ. நாகேஸ்வரன் (முன்னைனாள் கரைச்சிப் பிரதேச செயலர்) அவர்கள் 27.03.2018 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம். இவர் தம் பிரிவால் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரனின் சந்நிதியில் சங்கமமாகி நித்தியவாழ்வு பெற இறையருளினை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ்வண்ணம்,

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

(கி-2009)

# 31ம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியப்பிள்ளை இராமநாதன்**

கடந்த 27.02.2018 அன்று இறைபதம் அடைந்த *அமரர் சு. இராமநாதன்* (12ம் கட்டை) அவர்களின் அந்தியேட்டி கிரியை 29.03.2018 அன்று அன்னாரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 360, கரியாலை
நாகபடுவான்.

(கி-2010)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி. அழகம்மா இராமசாமி



மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும் மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா இராமசாமி (26.03.2018) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும், சிறீதரன் (அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்), குமுதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரனின் அன்பு பெரியம்மாவும், காந்தினிதேவி (ஊரெழு), விஜயராஜா (ஜேர்மனி), விஜயசோபனா ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீ வைஷ்ணவி, வைஷ்ணவன், குயிந்தன் (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), சாருஜா (ஜேர்மனி), லக்சன், கிருஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.03.2018) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் (இ.சிறீதரன்)
சங்கானை.

(3401)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் வேலாயுதம்



அந்திரான் கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வேலாயுதம் (ஓய்வுநிலை நகரசபை-பிரதம லிகிதர்) 25.03.2018 அன்று காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை வல்லிபுரம், வல்லிபுரம் தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பஞ்சபாக்கியம் (ஓய்வுநிலை மருத்துவ மாது) ஆகியோரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவகாமிப்பிள்ளை மற்றும் கந்தசாமி (ஓய்வுநிலை அதிபர்), செல்வவிநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், றோகினி (ஆசிரியை, யா/விக்னேஸ்வராக் கல்லூரி), முருகதாசன் (லண்டன்), கிருபதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானமூர்த்தி, சிவாஜினி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன், நீரஜா, நிகிதன், அரிஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.03.2018 இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். (கி-2007)

அந்திரான்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஹேக்கர்களின் தொடர் அச்சுறுத்தல் காங்கிரஸின் வித்ஐ.என்.சி.செயலி நீக்கம்




(டில்லி)

பொதுமக்களின் தகவல்கள் திருடப்படுவதாக வந்த தகவலை அடுத்து கூகுளில் இருந்து கட்சி செயலியை காங்கிரஸ் நீக்கியுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு என்று தனி செயலி உள்ளது. "வித் ஐ.என்.சி" என்ற இந்த செயலி மூலம் கட்சி உறுப்பினர்கள் பதிவு செய்யலாம். மேலும், கட்சி குறித்த அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில், அந்த செயலியை பயன்படுத்துபவர்களின் தகவல்கள் திருடப்படுவதாக ஹேக்கர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 'ஹேக்கர்' எல்லியட் அல்டர்சன் என்பவர் டுவிட்டரில் வெளியிட்ட அச்சுறுத்தலை அடுத்து இந்த செயலி நீக்கப்பட்டுள்ளது.

அவரது டுவிட்டரில், காங்கிரஸ் கட்சியின் "வீத் ஐ.என்.சி" செயலி குறித்த சுவாரஸ்யமான தகவல்கள் இன்று வெளியிடப்படும் என கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவு செய்திருந்தார்.

இதையடுத்து, காங்கிரஸ் கட்சி தனது செயலியை கூகுளில் இருந்து நீக்கி விட்டதாக நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளது.

நமோ செயலி நீக்கப்பட்டதற்கு, நரேந்திர மோடியை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மிகவும் தாக்கிப் பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. (10)

# காவிரி மேலாண்மை வாரியம் அமை… தமிழக விவசாயிகள் டில்லியில் உண்…

(டில்லி)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டில்லியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

காவிரி வழக்கில் கடந்த மாதம் 16 ஆம் திகதி தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம் காவிரி நடுவர் மன்றம் பரிந்துரைத்த அமைப்புகளை உருவாக்குவதற்கான செயற்றிட்டத்தை மத்திய அரசு 6 வார காலத்துக்குள் அமுல்படுத்தவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.




இந்தக் காலக்கெடுவின் இறுதி நாள் நாளை 29 ஆம் திகதி ஆகும். எனவே, அதற்குள் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழகத்தின் அனைத்து கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. காவிரி நடுவர் மன்றம் பரிந்துரைத்த அமைப்பாக காவிரி மேலாண்மை வாரியத்தை அனைத்து அரசியல் கட்சியினரும், விவசாயிகள் சங்கத்தினரும் சுட்டிக்காட்டி போராடி வருகின்றனர்.

நாளை 29 ஆம் திகதிக்குள் முழு அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழக காவிரி விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் டில்லியில் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

# இராம நவமி ஊர்வலத்தில் கலவரம் பீகாரில் ஊரடங்குச் சட்டம் அமுலில்



(அவுரங்காபாத்)

பீகாரின் அவுரங்காபாத் மாவட்ட தலைநகரில் இராம நவமி சிறப்பு ஊர்வலத்தில் இரு பிரிவினருக்கு இடையே வன்முறை வெடித்தது.

இராம நவமியையொட்டி பீகாரின் அவுரங்காபாத் மாவட்ட தலைநகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பு ஊர்வலம் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் திடீரென இரு பிரிவினருக்கு இடையே வன்முறை வெடித்தது.

கலவரக்காரர்கள் கற்களை வீசியும், மகராஜ்கஞ்ச் பகுதியில் உள்ள சில கடைகளுக்கு தீ வைத்தும் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து பொலிஸார் கலவரக்காரர்களை விரட்டியடித்து அங்கு அமைதியை ஏற்படுத்தினர்.

மேலும் பாதுகாப்புக்காக மத்திய ரிசர்வ் படையினரும் அங்கு வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

வன்முறை, அசம்பாவிதங்களை தவிர்ப்பதற்காக அங்கே நேற்று முன்தினம் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. மேலும் கலவரக்காரர்களை கண்டதும் சுடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இதனால் தற்போது அங்கு அமைதி திரும்பி இருப்பதாக மாவட்ட ஆளுநர் ராகுல் ரஞ்சன் மகிவால் தெரிவித்தார்.

கலவரத்தைத் தூண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த அவர், வன்முறையாளர்கள் யாரும் தப்ப முடியாது எனவும் எச்சரித்தார். இந்த கலவரத்தால் அவுரங்காபாத்தில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டு உள்ளது. (10)

# பாக்.நிறுவனங்கள் மீது பொருளாத… ட்ரம்பின் அதிரடியால் அதிர்ச்சியில்

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுத வர்த்தகத்தில் ஈடுபடுவதாக அமெரிக்காவின் தொழில் மற்றும் பாதுகாப்பு, வர்த்தக அமைப்பு பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள் மீதும் பொருளாதாரத் தடை விதித்தது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்காவின் கூட்டாளியாக பாகிஸ்தான் உள்ளது.

ஆனால், அந்த நாடு பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்தவொரு உறுதியான நடவடிக்கையும் எடுக்காமல், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருவதுடன், பயங்கரவாதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டி வருகிறது என அமெரிக்கா கருதுகிறது.

இதனால் அந்த நாட்டுக்கு வழங்கி வந்த 2 பில்லியன் டொலர் (சுமார் ரூபாய் 13 ஆயிரம் கோடி) நிதி உதவியை அமெரிக்கா நிறுத்திவிட்டது. மேலும் சொந்த மண்ணில் உள்ள தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்துகிறது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் செயற்பட்டு வரும் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 நிறுவனங்கள் அணு ஆயுத வர்த்தகத்தில் ஈடுபடுவதாக அமெரிக்காவுக்கு சந்தேகம் எழுந்தது. அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் தொழில் மற்றும் பாதுகாப்பு, வர்த்தக அமைப்பு அந்த 7 நிறுவனங்கள் மீதும் பொருளாதாரத் தடை விதித்தது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அமெரிக்க அரசின் இணையத்தளத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 நிறுவனங்களும் அமெரிக்காவின் தேசிய

# மனிதநேயம் மிக்க சிறைச்சாலை



(நோர்வே)

நோர்வேயிலுள்ள ஹால்டன் சிறை உலகிலேயே மனிதநேயமிக்க சிறையாக கருதப்படுகிறது. ஏனெனில் இங்குள்ள கைதிகள் சமைப்பது, கல்வி கற்பது, வேலை செய்வது மற்றும் சிறை காவலரோடு நேரம் செலவிடுவது என ஒரு சாதாரண வாழ்க்கையைப் போல சிறைத் தண்டனையை அனுபவிக்கின்றனர்.

இங்குள்ள அறைகளுக்கு கம்பிகள் இல்லை. ஜன்னல்கள் தான் உள்ளன. சிலருக்கு முதன்முறையாக கல்வி கற்கும் வாய்ப்பு இங்குதான் கிடைத்துள்ளதாக சிறை அதிகாரிகள் பெருமிதத்துடன் கூறுகின்றனர்.

கைதிகள் சிறையிலிருந்து விடுதலை ஆகும்போது சிறந்த மனிதராக அனுப்ப வேண்டும் என்பதே நோக்கம் என்று தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே கைதிகள் மீண்டும் குற்றங்கள் புரிவதில் குறைவான விகிதமுள்ள நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும்.

ஆனால் கைதிகளுக்கு இத்தகைய சொகுசான வாழ்க்கையை ஏற்படுத்தித் தருவதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பிறரை துன்புற செய்தவர் கட்டாயம் துன்புற வேண்டும்தான். ஆனால் இதுபோன்ற தவறுகளை கைதிகள் மீண்டும் செய்யாதிருக்கவே இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

# பொய்யான செய்திப் பரப்புரை… 10 ஆண்டுகள் கட்டாய சிறைத்…

## மலேசியாவில் புதிய ச…

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பொய்யான செய்திகளை வெளியிடும் நபர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல்சிறைதண்டனை விதிக்க வகை செய்யும் புதிய மசோதாவை பிரதமர் நஜீப் ரசாக் தலைமையிலான அரசு தாக்கல் செய்துள்ளது.

மலேசியாவில் பொய்யான செய்திகளை சமூக ஊடகங்கள் மூலம் வெளியிடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்என புதிய மசோதா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை பிரதமர் நஜீப் ரசாக் அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்டது. பொய்யான தகவல்களை வெளியிடுபவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் சிறை மற்றும் அபராதம் விதிக்கப்பட வேண்டும் என மசோதாவில் கூறப்பட்டுள்ளது.




இந்தச் சட்டத்தின் மூலம் மக்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்படும்.

பொய்யான செய்தி என்பது செய்தி, தகவல், அறிக்கை என எதுவாக

# வெளிநாடு

## ...மைக்கக் கோரி ...உண்ணாவிரதம்




இந்தப் போராட்டம், டில்லி நாடாளுமன்ற தெரு பொலிஸ் நிலைய வீதியில் நடைபெற்றது. இங்கு தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர் உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (10)

## ...ளாதாரத்தடை ...யில் சர்வதேசம்

பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை நலன்களுக்கு முரணாக நடந்துகொண்டது அமெரிக்க அரசால் உறுதிசெய்யப்பட்டதை தொடர்ந்து அவற்றின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன என தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, அணுசக்தி விநியோக குழுவில் உறுப்பினராக வேண்டும் என போராடிக் கொண்டிருக்கும் பாகிஸ்தானுக்கு பெருத்த பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. டொனால்ட் ட்ரம்பின் பாகிஸ்தான் மீதான அதிரடி நடவடிக்கை சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (10)

## ...ரை செய்தால் ...த் தண்டனை ...ய சட்டமூலம்

வேண்டுமானாலும் இருக்கலாம். அது வீடியோ மற்றும் ஒடியோவாக இருக்கலாம்.

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். அவர்கள் வெளியிடும் செய்தி மலேசியர்களை பாதிக்கும் எனில் அவர்களும் இந்தச் சட்டத்தின் படி தண்டிக்கப்படுவர்.

இதன்பின் பொதுமக்கள் மிகவும் கவனத்துடனும், பொறுப்புடனும் செய்திகளைப் பதிவு செய்வார்கள் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்களின் இறைமையை பாதுகாக்கும் மலேசியாவின் புதிய சட்டத்திற்கு சர்வதேச நாடுகளும் வரவேற்பளித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# ஏமனில் உள்நாட்டுப் போரைக் கண்டித்து ஹவுத்தி ஆதரவாளர்கள் கண்டனப்பேரணி

(சனா)

ஏமனில் உள் நாட்டுப் போர் மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் ஹவுத்தி ஆதரவாளர்கள் பிரமாண்ட கண்டனப் பேரணியில் ஈடுபட்டனர்.

ஏமனின் தலைநகர் சனாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கவுத்தி கிளர்ச்சியாளர்களின் ஆதரவாளர்கள் 10,000 பேர் பேரணி சென்றனர்.

பேரணியின்போது ஏமனின் கொடி மற்றும் ஹவுத்தி தலைவர் அப்துல் மாலிக்கின் புகைப்படங்களை ஏந்திச் சென்றனர்.



ஏமனில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெறும் போரினால் கடந்த பத்து வருடங்களில் இல்லாத மோசமான பஞ்சத்தை ஏமன் எதிர்கொள்ளப் போகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தென் மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப்படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவுதி அரேபியா செயற்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானோ கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. (10)

# கிம் யாங் உன் சீனாவிற்கு இரகசிய பயணம் ஜப்பான் ஊடகங்கள் பரபரப்பு தகவல்

(பியோங்யாங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன், சீனாவுக்கு இரகசிய பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக சீன மற்றும் ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் இதுகுறித்த உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகாத நிலையில், இரு நாடுகளும் மௌனம் காப்பது இதில் உண்மை தன்மை இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

இது கிம்மின் தந்தையும், முன்னாள் ஜனாதிபதியுமான கிம் யாங் உன், பீஜிங் வந்தபோது பயன்படுத்திய பச்சை நிறத்தில் மஞ்சள் கோடுகள் கொண்ட புகையிரத வண்டியில் இவர் இரகசியமாக சீனா வந்திருக்கக் கூடுமென ஜப்பானிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தோடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை புகையிரத நிலையத்தில் சில வழக்கத்திற்கு மாறான காட்சிகளைக் கண்டதாக புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், புகையிரத நிலையத்தை சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டிருப்பதாகவும், புகையிரத நிலையத்திற்கு உள்ளே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு பின்னர், இதுவரை நாட்டை விட்டு வெளியேறியது இல்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை தொடர் அணுவாயுத சோதனைகளை மேற்கொண்டதால் உலக நாடுகளே கிம் யாங் உன்னை



எதிர்த்த போது சீனா மட்டுமே அவருக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

# மாலிக்குப் படைகளை அனுப்புகிறதா கனடா?

## சர்வதேச இராஜதந்திரிகள் குற்றச்சாட்டு



(ஜெனிவா)

அமைதி காப்பு நடவடிக்கைக்காக மாலிக்கு தனது படைகளை அனுப்பவுள்ள கனடா மீது, வெளிநாட்டு இராஜதந்திரிகள் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளனர்.

எதற்காக அமைதி காப்பு நடவடிக்கைக்காக மாலிக்கு தனது படைகளை கனடா அனுப்பவுள்ளது. அதன் தேவை என்ன என்பது குறித்த விளக்கத்தினை கனடா இது வரை முன்வைக்கவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தெளிவற்ற தகவல்களை வெளியிடுவதன் காரணமாக, அல்லது தவறான தகவல்கள் பரப்பப்படுவதன் மூலம், இந்த நடவடிக்கைக்கு சாதாரண கனேடியர்களின் ஆதரவு குறித்த அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகவும், குறிப்பாக &#8220 முக்கிய நடவடிக்கை &#8221 என்ற சொற்பதங்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. அமைதி காப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஆறு இராணுவ உலங்கு வானூர்திகளை 12 மாதங்களுக்கு மாலிக்கு அனுப்பி வைக்கும் அறிவிப்பினை கனேடிய மத்திய அரசாங்கம் அண்மையில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (10)

# உளவாளி மீதான தாக்குதலின் எதிரொலி சியாட்டாவிலுள்ள ரஷ்ய தூதரகம் மூடல்

(மொஸ்கோ)

ரஷ்யா மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தும் ஒரு கட்டமாக, அமெரிக்காவின் சியாட்டல் நகரிலுள்ள ரஷ்யத் தூதரகத்தை மூடுமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

பிரித்தானியாவில்வைத்து ரஷ்ய உளவாளி தாக்குதலுக்குள்ளான சம்பவத்தினால், ஐரோப்பிய நாடுகள் சில ரஷ்யத் தூதரகத்தை மூடியும், அதன் அதிகாரிகளை வெளியேற்றியும் வருகின்றன. இந்த நிலையில் இச்சம்பவத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் அமெரிக்காவும் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சியாட்டல் நகரில் அமைந்துள்ள இந்த தூதரகம், போயிங் ரக விமான உற்பத்தி தொழிற்சாலை மற்றும் அமெரிக்காவின் நீர்மூழ்கி கப்பல் தளத்தின் அருகாமையிலுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

மேலும், பல்வேறு பணி நிமித்தமாக அமெரிக்காவில் தங்கியுள்ள ரஷ்ய நாட்டைச் சேர்ந்த உளவுப்படையினர் என சந்தேகிக்கப்படும் சுமார் 60 அதிகாரிகளை இன்னும் 7 நாட்களுக்குள் தங்கள் குடும்பத்தாருடன் வெளியேறுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டின் இராணுவத்துறை உளவுப்பிரிவில் உயரதிகாரியாக பணியாற்



றியவர் செர்ஜய் ஸ்கிர்பால் என்பவர், சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையினரிடம் காட்டிக் கொடுத்தமைக்காக கடந்த 2004 ஆம் ஆண்டு மொஸ்கோவில் இவர் கைது செய்யப்பட்டு, 13 ஆண்டு சிறைத்தண்டனைக்கு உள்ளானார். இதையடுத்து அவருக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் அடைக்கலம் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி, சாலிஸ்பரி நகரிலுள்ள ஒரு வணிக வளாகத்துக்கு தனது மகள் யூலியாவுடன் சென்றிருந்த வேளை இருவர் மீதும் இனந்தெரியாதோர் விஷ தாக்குதல் நடத்தியிருந்தனர். இருவரும் தற்போது வைத்திய சாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# சுதாகரனுக்கு பொதுமன்னிப்புக்கோரி திருகோணமலையில் கையெழுத்து



(திருமலை)


ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கிளிநொச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு திருகோணமலையில் இடம் பெற்றது.


குதித்த நிகழ்வு திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு முன்னால் உள்ள வீதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசின் சிறையில் ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் இரு பிள்ளைகளின் தந்தையான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனுக்கு மனிதாபிமான் அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மகஜரில் கையெழுத்து இடும் நடவடிக்கை திருகோணமலை மக்களால் இரவு, பகல் பாராது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளனர். (இ-7)

# புலிகளின் ஆயுதக் கப்பல் கடலில் மூழ்கடிப்பு





(கொழும்பு)

புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கப்பல் ஒன்றை கடற்படையினர் நேற்று முன்தினம் நீர்கொழும்புக்கு அப்பால் உள்ள ஆழ்கடலில் மூழ்கடித்தனர்.

விடுதலைப் புலிகளின் அனைத்துலக கடல்வழி விநியோகத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட கப்பல் ஒன்றை 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்தோனேசியாவில் வைத்து கைப்பற்றப்பட்ட இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, கடற்படையால் A-522 என இலக்கமிடப்பட்டு, WE LING என்ற பெயரில் பயன்படுத்தப்பட்டது.

இந்தக் கப்பல் தொடர்ந்து இயக்கப்பட முடியாத நிலையை அடைந்ததை அடுத்து, அதனை ஏலத்தில் விற்க முனைந்த போதும் எவரும் அதனை கொள்வனவு செய்ய முன்வரவில்லை.

இதனால், இலங்கை அரசின் அனுமதியுடன் இந்தக் கப்பல் கடற் படையினரால், ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. (இ-7)

# இலங்கையில் அதிசய காளான்! வியப்பில் புத்தளம் மக்கள்



(கொழும்பு)

புத்தளம் பிரதேசத்தில் அதிசய காளான் ஒன்று வளர்ந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

புத்தளம், கோட்டகச்சி, கொடகிவுல பிரதேசத்தில் நிஹால் பிரேமசிறி என்பவரின் தோட்டத்திலேயே இந்த காளான் வளர்ந்துள்ளது.

இந்தக் காளான் ஒன்றரை அடி அகலத்தை கொண்டுள்ள நிலையில் 3 அங்குலத்தில் தடிமனை கொண்டுள்ளது. நிலத்திலிருந்து ஒன்றரை அடி உயரம் வரை காளான் வளர்ந்துள்ளது.

அதிக வரட்சியான கால நிலையில் இவ்வாறான காளான் ஒன்று வளர்வதென்பது ஒரு அதிசயமாகக் கருதப்படுகின்றது.



வியப்பூட்டும் வகையில் வளர்ந்துள்ள காளானை பார்வையிட பெருந்திரளான மக்கள் பிரேமசிறியின் தோட்டத்திற்கு வந்து செல்கின்றனர். இலங்கையில் இது வரை கண்டறியப்பட்ட காளான்களில் இது மிகவும் பெரியது என பிரதேச மக்கள் தெரிவித்தனர். (இ-7)

# தென் சூடானில் அமைதிப் பணியில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்குப் பதக்கங்கள்

(கொழும்பு)

தென் சூடான் குடியரசில் அமைதிப் பணியில் ஈடுபடும் ஐ.நாவின் அமைதிகாப்பு படையில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை விமானப் படை போக்குவரத்துப் பிரிவினருக்கு உத்தியோகபூர்வ பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது இலங்கை விமானப்படையின் 19 விமானப்படை அதிகாரிகள் மற்றும் 85 விமானப்படை அதிகாரிகள், ஐ.நா. அமைதி காப்புப் பணிக்காக வழங்கப்படும் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டதாக இலங்கை விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.



குறித்த நிகழ்வில் இலங்கை விமானப் படையின் வானூர்தி பொறியியல் பிரிவின் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் எம்டி ரத்நாயக்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தென் சூடான் குடியரசில் ஐ.நாவின் அமைதிகாப்புப் பணியில் ஈடுபடும் பிரதம விமானப்படை போக்குவரத்துப் பிரிவின் அதிகாரியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பேசாப் பதுமைகள்

தொணத் தொணவென்று பேசியே கொல்லுகிறவர்கள் ஓர் ரகம் என்றால் வாயையே திறக்காமல் வாழ்கிறவர்கள் இன்னோர் ரகம்.

வாய் திறந்தால் அதில் உள்ள முத்துக்கள் கொட்டிப் போகும் என்று சிக்கனம் பிடிப்பவர்களெல்லாம் மற்றவர்கள் மனத்தில் இடம் பிடிப்பது மிகவும் கடினம்.

கேட்டால் அதிகபட்சமாக “நான் ரொம்ப ரிசர்வ் டைப். நான் பேச என்ன இருக்கின்றது? நீங்க சொல்லுங்க; நான் கேட்டுக்கிறேன்” என்பார்கள்.

நாம் என்ன நினைக்கின்றோம் என்பதை தெரிந்துகொள்ள ஊர் உலகத்திற்கு வாய்ப்புத் தராவிட்டாலும் நெருங்கிய வட்டத்திற்காவது அந்த வாய்ப்பைத் தர வேண்டும்.

இந்தக் கடமையைச் சரியான நேரத்தில் பொறுப்பாகச் செய்யாவிட்டால் நம்மைக் கலக்காமலேயே அனைத்து முடிவுகளும் எடுக்கப்படும். அந்த முடிவுகள் நம் வளர்ச்சியையோ நம் அன்றாட வாழ்க்கையையோ பாதிக்கும் படியாகவும் அமைந்துவிடும். இவர் சுயமாக எந்தக் கருத்தும் இல்லாதவர். இழுத்த இழுவைக்கு வருகிறவர் என்றெல்லாம் பெயரெடுப்பது நமக்கு நன்மையைச் செய்யாது.

“இந்தாளுக்கிட்டே பேசறதைவிட சுவத்தில முட்டிக்கலாம்” என்று மற்றவர்கள் முடிவுக்கு வந்துவிட்டால் அவர்கள் நம்மைவிட்டு வெகுதூரம் விலகிப் போய் விட்டார்கள் என்று பொருள்.

இதுவும் நமக்கு நல்லதல்ல. எதுவுமே பேசாமலிருந்தால் அதை இந்தச் சமூகம் இரண்டு வகை யாக அர்த்தப்படுத்திக் கொள்ளும். முத லாவது இவர் எதைப் பற்றியும் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவர்.

இரண்டாவது இவர் மிகவும் திமிர் பிடித்தவர். இப்படி எடுக்கப்படும் இரண்டு வகையான முடிவுகளும் உண்மையல்ல. ஆனாலும் அப்படிப் பெயராகிவிடும். இதற்கு இடம்கொடுக்கத்தான் வேண்டுமா?

குறைவாகப் பேசுவது மிகநல்ல பழக்கம்தான். அதற்காக ஒரேயடியாக உம்மணா மூஞ்சிகளாக இருந்துவிடக் கூடாது.

மற்ற விடயங்களில் மௌனம் சாதித்தாலும் நல்ல விடயங்களைப் பாராட்டுதல், மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுதல், அறிந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், சொந்தக் கருத்து சுய கருத்துக்களை வெளியிடுதல் ஆகிய விடயங்களிலாவது நாம் கொஞ்சம் மௌனம் கலைப்பது அவசியம்.

இயற்கை கொடுத்திருக்கும் இனிய ஆற்றலை நமக்கும் சாதகமாக்கிக் கொள்வதைவிட்டுவிட்டு மௌனத்தையே நம்முடைய பலவீனமாக ஆக்கிக் கொள்வதா?

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் : குணரஞ்சினி

## வினாத்தாள் பகுதி – I

நேரம் : ஒரு மணித்தியாலம்

● பின்வருவனவற்றுள் இரண்டு உருவங்கள் ஒத்த தன்மையுடையவை. வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

01.



1. 2. 3.

02.



1. 2. 3.


☞ கீழே தரப்பட்ட சொற்களுக்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

03. ஓடு மெதுவாக, கால்கள் அற்றது



1. 2. 3.

04. மரப்பொந்து, தாவரவுண்ணி, பேசும்




1. 2. 3.

☞ கூட்டில் உள்ள எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைக் கொண்ட கூட்டைத் தெரிவு செய்க.

05. 11 + [16 + 10] = 37


1. [14 + 12] 2. [20 +3] 3. [14 + 11]

06. வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1. 2
2. 5
3. 1

07. இவ்வுருவை தளவாடியில் அவதானிக்கும் போது தோன்றும் சரியான உருவைத்தெரிவு செய்க.




1. 2. 3.



● 8ஆம் 9ஆம் வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

08. பாகு ⟶ குருவி ⟶ விரும்பு ⟶ ...................


1. புத்தி 2. புத்தகம் 3. புன்னகை

09. காப்பு, கீரை, கூரை, .................. 1. கெடுதி 2. கைதி 3. கேள்வி

10. பாலைவனம் என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக் கூடிய ஒரு சொல்?

1. பாலம் 2. பாவம் 3. வானம்

11.



இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை

1. 5 2. 7 3. 6

12. தரப்பட்ட பாடல் அடிகளில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

*கடலிற் பொங்கும்திரையைப் பார்*
*காற்றில் ............................ நுரையைப் பார்*
*அலைகள் மோதும் கரையைப் பார்*

1. பறக்கும் 2. மிதக்கும் 3. சிதறும்

13. அளவு தெரியாமல் செலவு செய்யக் கூடாது என்னும் கருத்தைத் தரும் பழமொழி?

1. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
2. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
3. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

14. "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" எனும் பழமொழி உணர்த்துவது?

1. கடுகின் காரத்தை
2. சிறியதன் சிறப்பை
3. பெரியதன் சிறப்பை


● முதலில் தரப்பட்ட உருவை தளவாடியில் பார்க்கும் போது தோன்றும் விதம்.

15.




1. 2. 3.


16.




1. 2. 3.

● கணிதச் செய்கையை அவதானித்து விடைகளைத் தெரிவு செய்க.





17.



குறிக்கும் பெறுமானம் யாது?

1. 3
2. 4
3. 2

18.




1. 3 2. 1 3. 2

19. நேற்று வெள்ளிக்கிழமை ஆயின் நாளை மறுதினம் என்ன கிழமை?

1. செவ்வாய்க்கிழமை
2. திங்கட்கிழமை
3. சனிக்கிழமை

20. ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை. அம்மாதம் 15ஆம் திகதி என்ன கிழமை?

1. புதன்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. திங்கட்கிழமை

21. ஒரு வரிசையில் முன்புறமிருந்து பார்க்கும் போது கமலன் 7 ஆவதாகவும் பிற்புறமிருந்து பார்க்கும் போது 4 ஆவதாகவும் நின்றான். எனவே வரிசையில் நின்றவர்களின் எண்ணிக்கை யாது?

1. 11 பேர் 2. 10 பேர் 3. 12 பேர்

22. சிவப்பு, பச்சை, நீலம் ஒழுங்கில் ஒரு பந்தலில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன. எனவே 20 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

1. சிவப்பு 2. பச்சை 3. நீலம்

23. விமல் காலையில் பாடசாலை செல்லும் போது அவனது இடது கைப்பக்கம் நிழல் விழுந்தது. எனவே விமல் சென்ற திசையாது?

1. தெற்கு 2. வடக்கு 3. மேற்கு


24. எனது தாயாரின் தந்தையின் மகன் எனக்கு என்ன உறவுமுறை?

1. மாமா 2. பேரன் 3. சித்தப்பா

25. புதுவருடத்திற்கு 8 மாணவர்கள் தமக்கிடையே வாழ்த்து அட்டைகளை பரிமாறிக் கொண்டனர். அவர்களுக்கிடையே பரிமாற்றப்பட்ட வாழ்த்து அட்டைகள் எத்தனை?

1. 28 2. 30 3. 56


26.



உருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?

1. 4
2. 6
3. 5

● ஒரு வகுப்பில் மாணவர் விரும்பும் பூக்கள் தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து விடை எழுதுக.




27. மல்லிகைப்பூவை மட்டும் விரும்புவோர் எத்தனைபேர்?
1. 5 2. 6 3. 9

28. மல்லிகையையும் தாமரையையும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
1. 1 2. 3 3. 9

29. வவுனியாவில் புறப்பட்ட புகையிரதத்தில் 18 ஆண்களும் 10 பெண்களும் ஏறினர். அடுத்த புகையிரத நிலையத்தில் 3 ஆண்கள் இறங்கினர். 5 பெண்கள் ஏறினர். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை பேர்?
1. 28 2. 36 3. 30

30. ராஜாவின் வயது தந்தையின் வயதின் அரைவாசியாகும். அவனது தந்தையின் வயது 34 எனின் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
1. 51 2. 68 3. 50

31. 10 படிகள் உள்ள படிக்கட்டில் A முதல் படியிலும் B 10ஆம் படியிலும் நிற்கின்றனர். A ஒருபடியில் ஏறும் போது B இரு படிகள் இறங்கினால் அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?
1. 4 2. 5 3. 6

32. WWW என்பதன் விரிவாக்கம் யாது?
1. மின்னஞ்சல்
2. இணையம்
3. வையக விரிவு வலை

33. குமரன் 18 விசுக்கோத்துப் பெட்டிகளை கடையில் வாங்கி வீட்டிற்கு கொண்டு வரவேண்டியிருந்தது. அவன் ஒரு தடவைக்கு 4 விசுக்கோத்து பெட்டிகளையே கொண்டு வரமுடியும். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டுவர குறைந்தபட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?
1. 4 2. 5 3. 6

34. கணேஸ் ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை கணேஸ் இற்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
1. ரவி 2. கணேஸ் 3. மோகன்

35. மிகச் சரியான வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.
1. நோயாளர்கள் நோய்க்குரிய மருந்தை அளவாகவும் ஒழுங்காகவும் எடுக்க வேண்டும்.
2. நோயாளர்கள் தினமும் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.
3. நோயாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

36. ஒரு மாணவன் அதிகமாக வாழைப்பழத்தை சாப்பிட்டதால் நோய்வாய்ப் பட்டான். இதற்கு பொருத்தமான பழமொழி எது?
1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
3. பேராசை பெருந்தரித்திரம்

37. 3m நீளமும் 2m உயரமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 500ml வர்ணபூச்சு தேவை. 6m நீளமும் 3m உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு ml வர்ணம் தேவை?
1.100 ml 2. 1500 ml 3. 1200 ml

38. ஒழுங்குபடுத்துக.
A - புகையிரதத்தில் ஏறுதல்
B - பயணச்சீட்டு பெறல்
C - பொதிகளை இருக்கையின் மேல் வைத்தல்
D - ஆசனத்தில் அமர்தல்
E - புகையிரத நிலையம் செல்லுதல்

1. E, B, A, C, D 2. A, D, E, B, C 3. C,D,E,A,B

● மேசைப்பந்துப் போட்டியில் ஒரு பாடசாலையின் குழு மாணவர்கள் ஒவ்வொரு சுற்றிலும் பெற்ற வெற்றி விபரங்கள் வருமாறு.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1ம் சுற்று | △ | △ | ○ | ✱ |
| 2ம் சுற்று | ✱ | ✱ | ○ | △ |
| 3ம் சுற்று | ✱ | △ | ○ | ○ |

△ - வெற்றி
✱ - சமநிலை
○ - தோல்வி

39. மூன்று சுற்றுக்களிலும் கூடுதலாக வெற்றி வாய்ப்பை பெற்ற குழு எது?
1. B 2. D 3. A

40. மூன்று சுற்றுக்களிலும் தோல்வியைப் பெற்ற குழு எது?
1. A 2. B 3. C

## வினாத்தாள் பகுதி – II

நேரம் : இரண்டு மணித்தியாலம்

● பின்வரும் பந்தியை வாசித்து (1) தொடக்கம் (6) வரையுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

**குப்பைகளைக் கண்ட கண்ட இடங்களில் வீசாமல் கூடையொன்றில் இடுதல் அல்லது கிடங்கு ஒன்றில் புதைத்தல் வேண்டும். இதன்மூலம் குப்பை கூழங்கள் அற்ற சூழலை எம்மால் பேண முடியும். இவ்வாறு பேணுவதால் குறைவற்ற செல்வமான நோயற்ற வாழ்வை வாழலாம். எனவே நாம் வாழ்வதற்கு உகந்த புதியதோர் உலகத்தை உருவாக்கச் சிறுவர்களாகிய நாம் திடசங்கற்பம் கொள்வோம்.**

1. அடுக்கு மொழிச் சொல்லை எழுதுக?
......................................
2. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக?
......................................
......................................
3. இணைமொழிச் சொல்லை எழுதுக?
......................................
4. கீழ்க்கால், சுழி, சங்கிலிகொம்பு ஆகியவை ஒன்றாய் அமைந்த சொல்லினை எழுதுக?
......................................
5. 'உறுதி பூணுதல்' என்பதைக் குறிக்கும் ஒத்த சொல்லினைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக?
......................................
6. 'வறுமையான' என்பதற்குரிய எதிர்க்கருத்துச் சொல்லினை எழுதுக?
......................................

● இடைவெளியை பூர்த்தி செய்க.

1. என்னைப் பார்த்துக் கதைக்கிறதே
ஏதோ .............................................. கேட்கிறதே
இன்னும் நாங்கள் பழகாத
இனிய .............................................. சொல்கிறதே
2. நன்றி மறப்பது .............................................. நன்றல்ல
அன்றே மறப்பது நன்று

● பொருத்தமான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. ஐம்பதவாவது ஆண்டு நிறைவு விழா ..................................
(வைரவிழா, பொன்விழா)
2. கடவுள் இல்லை எனக் கூறுபவன் ..................................
(நாத்திகன், ஆத்திகன்)
3. சிறுவர் கடற்கரையில் .................................. களைப் பொறுக்கி விளையாடினார்.
(ஊரி, ஊறி)

● பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(பாடுங்கள், அம்மா, படித்தான், பறந்தன)

1. உயர்திணை பெண்பால் ஒருமைப் பெயர்ச்சொல்
......................................
2. அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைச்சொல்
......................................
3. உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச்சொல்
......................................

● வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. சூரிய .................................. (ஒலி, ஒளி) மிகவும் பிரகாசமானது.
2. எனது சீருடையில் மைக் .................................. (கரை, கறை) படிந்தது.
3. நகரக்காவலன் இரவு வேளையில் .................................. (உளவு, உழவு) பார்த்தான்.
4. பூனையைக் கண்ட எலி ஓடி .................................. (ஒழிந்தது, ஒளிந்தது)

● சரியாயின் ☑ எனவும் பிழையாயின் ☒ எனவும் அடையாளம் இடுக.

1. மகாத்மாகாந்தி 'சத்தியசோதனை' என்ற சுயசரிதை நூலை எழுதினார். ( )
2. உயிர் எழுத்துக்கள் பதினெட்டு ஆகும். ( )
3. 'பறந்தது' என்பது அஃறிணை, ஒருமை, படர்க்கை வினைச் சொல் ஆகும். ( )

# இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்த 2வது ரோந்துக்கப்பல் இலங்கை வந்தது



(கொழும்பு)


இலங்கை கடற்படையின் கடலோர பாதுகாப்பு பணித் தேவைக்காக கோவா (Shipyard Limited (GSL) இல் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் கடல்வழி ரோந்துக்கப்பல் (AOPV) நேற்று முன் தினம் காலை கொழும்பு துறை முகத்திற்கு வந்தடைந்தது.

இவ்வாறு வந்தடைந்த ரோந்துக்கப்பலை இலங்கை கடற்படை மரபுகளுக்கு அமைய இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

இந்த கரையோர பாதுகாப்பு கடற்படையின் சமீபத்திய கப்பல் தளபதி சமன் பெரேரா மற்றும் 18 அதிகாரிகளும் 100 கடற்படை உறுப்பினர்களுடன் இலங்கைக்கு வந்துள்ளது.

கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, கடற்படைத் தளபதிகளின் தலைமை பணிப்பாளர் ரையர் அட்மிரல் பியால் டி சில்வா, மேற்கு கடற்படைப் தளபதி ரையர் அட்மிரல் நிஷாந்த உலுகெட்டென்னே, கடற்படை செயலாளர் மற்றும் கடற்படை தளபதியின் செயலாளர், அட்மிரல் விஜித மெட்டெகோடா, மேற்கு கடற்படைத் தளபதியின் மூத்த கடற்படை அதிகாரிகள் ஆகியோர் இந்த புதிய கப்பலை பார்வையிட்டதுடன் அடுத்த வாரம் இந்த கப்பலுக்கான இலங்கை பெயர் சூட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிலாபம் நகர சபையின் தலைவர் தெரிவு பிற்போடல்



(கொழும்பு)

சிலாபம் நகர சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு கால அறிவித்தல் இன்றி பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு சபை ஒன்றுகூடவுள்ளதாகவும், அதேநேரத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 9 உறுப்பினர்கள் மாத்திரமே சபைக்கு சமுகமளித்துள்ளனர்.

வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமானால் குறைந்தது 10 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

சிலாபம் நகர சபை மொத்தமாக 20 உறுப்பினர்களை கொண்டது என்பதுடன், ஐ.தே.கவின் 7 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் சபைக்கு சமுகமளித்துள்ளனர்.

எவ்வாறாயினும் போதுமான வரவு அற்ற காரணத்தால் வாக்கெடுப்பு நடவடிக்கை வடமேல்மாகாண ஆளுநர் ரஞ்சன் ஜயசிங்கவால் பிற்போடப்பட்டுள்ளது. (இ-7)

# கோத்தபாயவுக்கு மீண்டும் சிக்கல் இடைக்கால தடை நீடிப்புக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் வகையில் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்படுவதற்கு சட்டமா அதிபர் எதிர்ப்புத் தெரிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை எடுப்பதை தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடையுத்தரவை நீடிக்க வேண்டாம் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரட்ன ரிட் மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார்.

டி.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபா பொதுமக்களின் பணத்தைப்பயன்படுத்தியதாக பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் வழங்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான பத்மன் சுரசேன, ஷிரான் குணரட்ன ஆகியோர் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடித்தனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணையில் இரு தரப்பினரும் அன்றைய தினம் வாதங்களை முன்வைக்கவுள்ளனர்.

இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, சீ.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபயசேகர, நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ரவி வைத்தியாலங்கார மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொது சொத்துக்கள் சட்டத்தின் 8 (1) சரத்தின் கீழ் மோசடிசெய்ததாக பதிவுசெய்யப்பட்டுள்ள சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு பதிலளிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கும் ரிட் மனுவொன்றை ராஜபக்ஷ தரப்பு தாக்கல் செய்துள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ்.டி.சில்வா ஆஜராகியிருந்தார்.

சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரட்ன, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரட்னாயக்க, சிரேஷ்ட அரச சட்டத்தரணி உதார கருணாதிலக, சிரேஷ்ட சட்டத்தரணி நிர்மலன் விக்னேஸ்வரன் ஆகியோர் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1370

Search for people, places and things    Nagendram  Home

### குட்டி

எத்தனையோ பேர் நான் இருக்கிறேன் எனச் சொன்னாலும் அப்பாவைப் போல் யார் இருக்க முடியும்



### லக்ஷனா

அப்பா அடிப்பாருடா எனப் பயமுறுத்தி பயமுறுத்தியே ஒட்டுமொத்த பாசத்தையும் தாய்மார்களே தக்க வைத்துக் கொள்கிறார்கள்



### சாம்பவி


மகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு மட்டுமே தெரியும்



நம் மகளுக்கு சமைக்கத் தெரியாது... சாப்பிட மட்டுமே தெரியும் என்று...

### தனுஜா

உன்னைப் பற்றிய உன் எண்ணமே



நீ யார் என்பதை உலகிற்குக் காட்டும்...!

### சதீஸ்

இங்கதான் நிறையப் பேரு புல்லு வாங்குறாங்க... வா மச்சான் கேட்டுப் பார்ப்போம்




### சங்கீத்

ஊத்திட்டேன் வேஸ்டாயிடும்... இந்த ஒரு தோசை மட்டும் சாப்பிடுப்பா- அம்மா



தோசை போதும்னா சொல்லிருங்க... ஊத்தினா வேஸ்டாயிடும்- மனைவி

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## முன்னாள் தூதுவர்; மகிந்தவின் மருமகன்

# உதயங்க வீரதுங்க டுபாயில் மீண்டும் கைது


# கொழும்பு கொண்டு வருவதற்கு முயற்சி

(டுபாய்)

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, டுபாயில் நேற்று முன்தினம் காலை அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே டுபாய் அதிகாரிகள் உதயங்க வீரதுங்கவை கைது செய்துள்ளனர்.



இதையடுத்து உதயங்க வீரதுங்கவை அதிகாரிகளிடம் ஒப்படைப்பது தொடர்பாக, டுபாய் அதிகாரிகளுடன் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு பேச்சு நடத்தி வருகிறது.

முன்னதாக அமெரிக்கா செல்ல முயன்ற போது டுபாய் அதிகாரிகளால் உதயங்க வீரதுங்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அவரை கொழும்புக்கு கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில், உதயங்க வீரதுங்கவைக் கைது செய்வதற்கான அனைத்துலக பிடியாணை நீதிமன்றம் மூலம் பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசியல் நெருக்கடி; பிரதமர் ரணில் திடீர் உத்தரவு சீனா சென்ற ஐ.தே.க. உறுப்பினர்கள் மீளழைப்பு

(கொழும்பு)

சீனாவுக்கு ஆராய்விற்காக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் 6 பேரையும் ஏப்ரல் முதலாம் திகதி நாடு திரும்புமாறு பிரதமர் அறிவுரை வழங்கியுள்ளார்.

ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து விவாதம் இடம்பெறவுள்ளதால், இதில் கலந்து கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தம்மை தயார்படுத்துவதற்கே பிரதமரால் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்சமயம் சீனாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர். குறித்த குழுவினர் ஏப்ரல் 3 ஆம் திகதியே நாடு திரும்பவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சஜின்வாஸிடம் 3 மணித்தியாலங்கள் தீவிர விசாரணை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு வாகனங்களை கொள்வனவு செய்யும் போது இரண்டு கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவிடம் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு 3 மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பதிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் இந்த வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இதற்கு முன்னர் இச்சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் அப்போதிருந்த முன்னாள் பிரதான கணக்காளர் நாயகம் மற்றும் மேலதிக செயலாளரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வெளிப்படுத்திய தகவல்களுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவிடம் நேற்று முன்தினம் இவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது. (இ-7)

## உலகின் சிறந்த துறைமுகங்களில் கொழும்பு துறைமுகம் முன்னேற்றம்



(கொழும்பு)

உலகின் சிறந்த தொடர்புகளைக் கொண்ட துறைமுகங்களை தரப்படுத்தும் வரிசையில் கொழும்பு துறைமுகம் 13 ஆவது இடத்திற்கு தெரிவாகியுள்ளது.

ட்வ்ரி குளோபல் கென்ரயினர் துறைமுகம் தொடர்பான சுட்டெண் (Drewry Global Container Port Connectivity Index) மதிப்பீட்டிற்கு அமைவாக கொழும்பு துறைமுகம் உலகின் சிறந்த தொடர்புகளைக் கொண்ட 20 துறைமுகாங்களில் 13 ஆவது இடத்திற்கு தெரிவாகியுள்ளது.

கடந்த காலங்களில் 18 ஆவது இடத்தில் இருந்த கொழும்பு துறைமுகம் கடந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் இவ்வாறு 5 துறைமுகங்களை பின்தள்ளி முன்னேற்றமடைந்துள்ளது.

இம்முறை இந்தப் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டிருந்த ஜேபேல் அலி மற்றும் அல்ஜசீரா ஆகிய துறைமுகங்களும் இடம்பெற்றுள்ளன.

துறைமுக மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் உலகின் கொள்கலனைக் கையாளும் துறைமுகங்கள் மற்றும் அவை தொடர்பில் குறிப்பிட்ட இலக்கை அடையும் துறைமுகங்கள் குறித்து இந்த துறைமுக புள்ளிவிபரம் கணிப்பீடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சமூக வலைத்தளத்தில் தகவல் பரிமாற்றம் இலங்கை சட்டத்திற்கமைய குற்றமேயல்ல

### சட்டத்தரணி மஹாநாமகே கடும் விசனம்

(கொழும்பு)

சமூக வலைத்தளம் ஊடாக ஏதாவது ஒரு தகவலை பரிமாற்றிக்கொள்வது இலங்கையின் சட்டத்திற்கமைய தவறு அல்ல என சட்டத்தரணி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்க தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேலைத்திட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று 3 பிள்ளைகளின் கல்வி உரிமையை இந்த அரசாங்கம் இழக்கச் செய்துள்ளது. பேஸ்புக்கில் ஏதோ ஒன்றை பகிர்ந்தமையினால் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்திலேயே அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனுடன் தொடர்புடையவர்கள் ஒருவரும் கைது செய்யப்படவில்லை. மின்னஞ்சல் ஒன்றை பகிர்வது இலங்கை சட்டத்தில் தவறு அல்ல.

ஜனாதிபதியின் இணையத்தளத்திற்குள் ஊடுறுவிய மாணவன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஏன் இந்த இரட்டை நடைமுறை? சமமான நீதி எங்கே?

அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரி ஒருவர் மனித உரிமையை மீறினால் அமைதியாக இருக்க வேண்டாம். அந்த நேரத்திலேயே சத்தமிடுங்கள். முடிந்தால் அதனை காணொலியாகப் பதிவிட்டு இணையத்தில் வெளியிடுங்கள். பொலிஸ் அதிகாரி யாரையாவது தாக்கினால் அதனை பயமின்றி காணொலியாக பதிவிட்டு இணையத்தளத்தில் பதிவேற்றுங்கள்.

அதற்கு எதிராக யாரையும் கைது செய்ய முடியாது. மதிய நேரங்களில் ஒருவருக்கு ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்கின்றனர். கிராண்ட்பாஸ் பகுதியில் தலையைக் கொண்டு வந்து போடுகின்றார்கள். இவ்வாறான தவறுகள் செய்ய முடியும். இவற்றிற்கு விசேட நீதிமன்றங்கள் கிடையாது. அப்படி என்றால் இதுதான் நீதியான சட்டமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

## கம்பஹா மாணவிக்கு நடக்கும் அநீதி!

### அதிகாரிகள் அலட்சியம்



(கொழும்பு)

தாயார் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதை காரணம் காட்டி கம்பஹா மாணவியொருவருக்கு கல்வித்துறை அதிகாரிகளால் தொடர்ந்தும் அநீதி இழைக்கப்படுகின்றது.

கம்பஹாவின் கணேமுல்லை, குடாபொல்லன பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுமங்கல ஆரம்ப வித்தியாலயத்தில்கல்விகற்கும்மாணவியொருவருக்குகடந்த ஒரு வருடகாலமாக பாடசாலைக்குச் செல்வதற்கான அனுமதி அதிபரால் மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் தாயார் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதை காரணம் காட்டி சிறுமியின் கல்வி உரிமை அதிபரால்மறுக்கப்பட்டுள்ளது.

எனினும் சிறுமியின் தாயார் எயிட்ஸ் மறுவாழ்வு மையமொன்றில் சேர்ந்து தனக்கான சிகிச்சை பெற்றுக் கொள்வதுடன் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் பங்களிப்பை நல்கி வருகின்றார்.

இந்நிலையில் அவரின் மகள் இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள நிலையில் தாயாரின் நோயைக் காரணம் காட்டி சிறுமியின் கல்வி உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடமாக மகளின் கல்வி உரிமைக்காக குறித்த தாயார் தொடர் போராட்டங்களை நடத்தி வரும் போதிலும் அதிகாரிகள் தொடர்ந்தும் அலட்சியம் காட்டி வருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான காலாண்டுப் பரீட்சைகளும் முடிவடைந்த நிலையில் இதுவரை தன் மகளுக்கு பாடசாலை செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான நிலையில் அவர் புலமைப்பரிசில் பரீட்சைக்கு எவ்வாறு தோற்றுவார் என்றும் தாயார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் தனது கல்வியைத் தொடர அனுமதிக்குமாறு கோரி பாதிக்கப்பட்ட சிறுமி கம்பஹா வலயக் கல்வி அலுவலகம் முன்பாக தொடர் போராட்டமொன்றில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். அவரின் தாயாரும் இதற்கு ஒத்துழைப்பாக போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.



பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நியாயம் கிடைக்கும் வரை போராட்டங்களை முன்னெடுக்குமாறு சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரஜைகள் சமாதான சபை, தேசிய நல்லிணக்கப் பேரவை உள்ளிட்ட அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (இ-7)

# முஸ்லிம்களுக்கு துரோகமிழைப்பது எனது அரசியல் கொள்கையில்லை

## அமைச்சர் பைஸர் கூறுகிறார்

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்துக்குத் துரோகமிழைப்பது தனது அரசியல் கொள்கையில்லை என தெரிவிக்கும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, கண்டியில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லத் தன்னால் முடிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.



உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை 37 ஆவது கூட்டத் தொடரின் காலக்கிரம மீளாய்வு தொடர்பிலான விவாதத்தில் பங்கேற்க இலங்கை சார்பிலான அமைச்சர்கள் குழுவில் எனக்கும் இடம் கிடைத்திருந்தது.

"இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஜெனிவா அமர்வில் பங்கேற்கச்சென்றபோது நான் முஸ்லிம்களைக் காட்டிக் கொடுக்கப் போவதாகவும், முஸ்லிம்களுக்குத் துரோகம் இழைக்க முற்படுவதாகவும் பலர் கூறினர், சமூக வலைத் தளங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டது.

"கண்டியில் இடம்பெற்றது முஸ்லிம்களின் பிரச்சினை என்ற கோணத்தில் மாத்திரம் பார்க்கப்படக் கூடாது. அது பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்புகளின் அசமந்தப் போக்கினால் ஏற்பட்ட பிரச்சினை.

"அதனால் பாதுகாப்புத் தரப்புகள் இந்த விவகாரத்தில் தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கங்கள் உள்ளது என்பதை நாங்கள் சர்வதேசத்துக்கும் அறிவித்துள்ளோம்.

"இதனால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கத்தால் வழக்கப்பட்ட வாக்குறுதி, சர்வதேசம் வரை எடுத்துச் செல்லப்படுவதற்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது. குறிப்பாக கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. அதனால் நான் கடந்த அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"தற்போதைய அரசாங்கத்திலிருந்து முஸ்லிம் சமூகத்துக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டாலும் நான் இந்த அரசிலிருந்தும் வெளியேறத் தயாராகவே உள்ளேன். எவ்வாறாயினும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சிறிய கட்சிகள் வடக்கு, கிழக்குக்கு மாத்திரமே பொருத்தமானதாக அமையும். தேசிய கட்சிகளிலிருந்து சேவையாற்றினாலும் முஸ்லிம் மக்களுக்கு ஒருபோதும் துரோகமிழைக்கமாட்டேன்" எனத் தெரிவித்தார். (இ-7)

# கண்டிக்கலவர விசாரணை நிறைவு உண்மையை வெளிப்படுத்துங்கள்

(கொழும்பு)

கண்டி, தெல்தெனியவில் இடம்பெற்ற இனக் கலவரம் தொடர்பிலான பொலிஸ் விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் இதில் தொடர்புடையதாகக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய குழுவினரை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு பொலிஸாரிடம் கேட்டுக் கொள்வதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபரின் பெயர், ஊர் என்பவற்றை பாராளுமன்றத்தில் முன்வைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கண்டிக் கலவரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் தன் மீதும் தனது கட்சியின் மீதுமே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மலர் மொட்டு கட்சியுடன் தொடர்புடையவர்கள் எனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் சம்பிக்க தெரிவித்தார். (இ-7)

# வேலையற்ற பட்டதாரிகளின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண சபையினை முற்றுகையிட்டு வேலையற்ற பட்டதாரிகள், கடந்த ஆண்டு நடத்திய போராட்டம் தொடர்பில் நான்கு பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை திருகோணமலை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையை முற்றுகையிட்ட குற்றச்சாட்டில் மட்டக்களப்பு பட்டதாரி சங்கத் தலைவர் தெ.கிஷாந்த், ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஏற்பாட்டாளர் தென்னே ஞானாநந்த தேரர், திருமலை பட்டதாரிகள் சங்க தலைவர் சிவகுமார், செயலாளர் பிரகலாதன் ஆகியோர் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு ஏழு நாட்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு ஒரு வருடத்திற்கும் மேலாக விசாரணையில் உள்ள நிலையில், இது குறித்து பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற வழக்குகளைப் போலவே வேலையற்ற பட்டதாரிகளின் தொழில் கனவுகளும் பிற்போடப்பட்டுக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகுமென்றும், இதனை ஒரு சமூகப் பிரச்சினையாக கருதி இதற்குரிய தீர்வினை மிக விரைவில் பெற்றுத் தர வேண்டுமெனவும் மட்டக்களப்பு பட்டதாரி சங்கத் தலைவர் தெ.கிஷாந்த் தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 08

### பரமசாமி பஞ்சாட்சரம்

அகத்தியர் தென்னாட்டிற்குப் பொதிகைமலை என்னும் இடத்திற்கு(தமிழ் நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்றாலம்) வந்து பாரதத்தைச் சமன்செய்ததாகவும் சிவசக்தி திருமணத்தினை தமிழகத்திலிருந்து கண்டவராகவும் தமிழைச் சிவபெருமானிடம் இருந்து கற்றவராகவும் அறியப் பெறுகிறார்.

இவர் அகத்தியம் எனும் முதல் தமிழிலக்கண நூலை எழுதியவர். தொல்காப்பியத்தை எழுதிய "தொல்காப்பியனார்" என்றும் "சித்த மருத்துவமுறைகளை" வழங்கிய முனிவர் என்றும் அகத்திய முனிவர் குறிப்பிடப் படுகிறார். இந்தக் கருத்தைத் திருமூலர் தன் இரண்டாவது தந்திரத்தில் வரும் அகத்தியம் என்ற தலைப் பின்கீழ்(மந்திரம் 337 இல்) கூறியுள்ளார்.

அகத்தியர் சோதிட நூல்கள், சித்த மருத்துவ நூல்கள் போன்ற பல நூல்களை எழுதியவர். முத்தூரில் பல கலைகளைப் போதித்த முனிவராவார். புலத்தியரின் சகோதரி உலோபா முத்திரையை அகத்தியர் திருமணம் செய்து வாழ்ந்து நட்சத்திரமானார் என்று புராணங்கள் கூறுகின்றன.

சித்தராகிய புலத்திய முனிவர் அட்டமா சித்திகளிலே கைதேர்ந்தவரும் பிரம்மாவின் புத்திரரும் கயிலாசத்தின் மேல் மிகுந்த பக்தியுள்ள சிவனடியாரும் ஆவார்.

இவருக்கு இல்லற வாழ்க்கையில் நாட்டம் கூடுதலாக இருந்தபடியால் சிவபெருமான் அவரை மண் உலகத்திற் பிறந்து உலக வாழ்க்கையை அனுபவிக்க அருள்பாலித்தார்.

புலத்திய முனிவர் கிழக்கு இலங்கையிலே இயக்கர் குலத்திற் பிறந்து அகத்தியரின் சிறந்த மாணாக்கராகத் திகழ்ந்து பின் தமிழில் இலக்கணம், மருத்துவம், சோதிடம் ஆகிய துறைகளில் நூல்கள் எழுதினார். தமிழ்க் கலைகளில் புலமையுள்ள இவர் ஒரு காலத்தில் பொலநறுவையை அரசாண்டார். யோரின் பேரனாவார். விச்சிரவரசு முனிவரின் தந்தையுமாவார்.

மகாசித்தராகிய திருமூல முனிவர் திருக்கைலாசத்தில் இருந்தவர். கயிலாய மலையில் நந்தி தேவரின் உபதேசத்தைப் பெற்றயோகியாகிய அவர் அட்டமா சித்திகள் பெற்றவர். அவர் அகத்தியரிடத்தில் கொண்ட



இவர் மகா சிவபக்தனான இராவணன், குபேரன் ஆகி நட்பால் பொதியமலை நோக்கி வந்து திருவாவடுதுறையை அடைந்தார்.

இவர் பசுக்களுக்கு உதவி செய்வதற்காக இறந்து கிடந்த மூலன் என்ற இடையனின் உடலில் புகுந்து உதவி செய்ததன் பின் தன் உடலைக் காணாமல் இடையன் உடலிலே செயற்படலானார். இவர் திருவாவடுதுறையில் இருந்து பல நூல்களை எழுதியவர்.


திருமூலர் எழுதிய பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் ஒன்பது பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியும் ஆகமங்களின் சாரமாக அமைந்தமையால் திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளது.

இவர் நந்திதேவரின் அருளினால் திருவாவடுதுறைக் கோயிலின் மேற்கு வீதியில் அரசமர நிழலில் இறைவனை வணங்கிய வண்ணம் யோகத்தில் ஆழ்ந்திருந்து நாம் நந்திதேவரிடம் கேட்ட ஆகமப்பொருட்களை யோக நிலையிலே தெளிந்து ஆண்டுக்கு ஒருமுறை விழித்தெழுந்து ஒவ்வொரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்களைப் பாடியுள்ளார்.

(தொடரும்)

# காணாமல் போனோர் அலுவலகம் குறித்து நாம் நம்பிக்கையை ஏற்படுத்தவுள்ளோம்

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்களிடத்தில் நம்பகத்தன்மையை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளைத் தாங்கள் மேற்கொள்ளவிருப்பதாக காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்த உருவாக்கப்பட்ட அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் கொழும்பு ஊடகத்திற்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அந்த ஆணைக்குழுவின் ஊடாக தங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

அவர்களது நம்பிக்கையில்லாத் தன்மைக்கான நியாயபூர்வமான காரணங்களை தாம் ஏற்றுக் கொள்வதாக சாலிய பீரிஷ் தெரிவித்தார்.

ஆனால் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சுயாதீமாக செயற்பட்டு, அவர்களின் நீண்டகால கேள்விகளுக்கு பதிலளிப்பதே எமது இலக்கு.

கடந்த காலத்தில் நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்கள் பிரயோசனப்படாமல் போனதைப் போல அல்லாமல், மக்களுக்கு பிரயோசனமான சேவையை காணாமல் போனோர் அலுவலகம் வழங்க முயற்சிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக எதிர்வரும் வாரங்களில் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து காணாமல் போனோரது உறவினர்களை சந்தித்து கலந்துரையாட விருப்பதாக சாலிய பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்டி இனவாத வன்செயல் குறித்து துருக்கி தூதுவர்-ஹக்கீம் பேச்சு



(கொழும்பு)

துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துண்கா. சுஹதார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இரு தரப்பு உறவுகளை மையப்படுத்தி இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது, அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத வன்செயல் குறித்து அமைச்சர் தனது கவலையை வெளியிட்டதுடன், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கையில் துருக்கி முதலீடு மேற்கொள்வதற்கு ஆர்வம்செலுத்தி வருவதை அமைச்சர் இதன்போது பாராட்டினார். (இ-7)



உலக நீர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் "இயற்கையோடு வாழ்வோம் நீர்வளம் காப்போம்" எனும் தலைப்பிலான கண்காட்சி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி ப.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கலாநிதி ஞா.குணசீலன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)

# பாதாள உலகக்குழுத் தலைவன் மதூஷின் இரகசியத்திட்டம் அம்பலம்

(கொழும்பு)

டுபாயிலிருந்து இத்தாலிக்குத் தப்பிச்சென்று வசித்து வருவதாக கூறப்படும் பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவர் மாகந்துர மதூஷ், சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

டுபாயிலிருந்தவாறு இலங்கையில் பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் வலையமைப்பை வழி நடத்திச் செல்வதாகக் கூறப்படும் மாகந்துர மதூஷ், அரசியல் புகலிட கோரிக்கை தொடர்பில் கடந்த ஒருமாத காலமாக தேவையான ஆவணங்களைத் தயார் செய்து குறிப்பிட்ட தரப்பினருக்கு அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிறப்பு புலனாய்வுத் துறை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனது சகோதரர் இலங்கை பாதுகாப்பு பிரிவினரால் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதாகவும், இலங்கை பொலிஸார் தன்னையும் அவ்வாறே கொலை செய்ய முயற்சித்த வேளையிலேயே தாம் நாட்டை விட்டு தப்பி வந்துள்ளதாக தெரிவித்தும் பொலிஸ், தனக்கு எதிராக சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் சித்திரிக்கப்பட்டவை எனவும் சுட்டிக் காட்டியே மதூஷ் தனது புகலிட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கையில் இடம்பெற்ற பல கொலைகள் தொடர்பில் மதூஷ் பிணையில் இருப்பதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளதோடு, அவரை கைது செய்ய சர்வதேச பொலிஸார் ஊடாக நீல அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதோடு, நாட்டில் சிவப்பு அறிவித்தலும் பிறப்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் குறித்த நீல அறிவித்தல் ஊடாக மதூஷை கைது செய்ய சிக்கல் நிலவும் நிலையில், அவருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிக்கையை பிறப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதாள உலக ஒழிப்பு, போதை பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிரடிப்படையின் கட்டளைத்தளபதி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபர் எம்.ஆர்.லத்தீஃப் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரி மர்ம மரணம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாம் தங்கியிருந்த அறையில் உயிரிழந்து காணப்பட்டதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது உபுல் ரஞ்சித் கலேகே என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகலாகியும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்குத் திரும்பாமையால் அவரது அறையினை சென்று திறந்து பார்த்தபோது உறங்கியவாறு உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உடல் உறவினரிடம் ஒப்படைக்கப்படும் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 40 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 80 | 70 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 40 | 50 | 60 | 50 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 30 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 80 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 25 | 50 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 30 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 160 | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 55 | 100 | 80 | 90 |
| பாகற்காய் | 170 | 160 | 100 | 150 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 40 | 100 | - | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 40 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 110 | 80 | 160 | 120 |
| பீற்றூட் | 20 | 40 | 25 | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 50 | 60 | 30 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 420 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 80 | 200 | 60 | 140 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | - | 50 | 60 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 140 | 90 | 160 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 30-90 | 80 | 90 | 90 |
| இராசவள்ளி | 160 | 160 | 110 | 200 | 150 | 160 |
| வெங்காயபூ | 100 | 120 | - | - | 120 | 80 |
| முள்ளங்கி | 40 | 100 | 25 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | - | 60 | 60 | 80 |

# சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கனியவள அகழ்வு குறித்து விரைவில் சட்ட நடவடிக்கை

## ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மண், மணல் மற்றும் கல் அகழ்வுகள் குறித்து விரைந்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

பூகோள சரிதவியல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இயற்கையை பாதுகாப்பதற்கான கடமை அனைவருக்கும் காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி இயற்கையை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது அவற்றைச் செய்த காலத்தில் அன்று வெகு காலம் சென்று அது ஞாபகத்துக்கு வரும்போதுதான்.
- ரூஸோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பதவிக்காக தமிழ் மக்களை ஏமாற்றிய கூட்டமைப்பு

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படியெல்லாம் நடந்து கொள்கிறது என்பதை நினைக்கும்போது ஏதோவொரு அழிவு ஏற்படப் போகிறது என்பதை மட்டுமே உணர முடிகிறது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை எப்படியெல்லாம் தூற்றிய இலங்கைத் தமிழரக் கட்சி இப்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற்று உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கக்கூடாது என்று தடுத்தவர்கள் தமிழரசுக் கட்சியினர்.

கூடவே தேசிய அரசியல் கட்சிகள் வடக்கில் வேரூன்றவிடக்கூடாது என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறியவர்களும் அவர்களே.

ஆனால் இப்போது பதவி என்றதும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைத் தமிழ் மக்கள் பார்த்து அறிந்திருப்பர்.

ஒருமுறை தீவகத்து நாரந்தனைப் பகுதியில் தங்களை ஈபிடிபியினர் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டிய தமிழரசுக் கட்சியினர் அதனை வைத்தே பாராளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர்.

இவ்வாறான தாக்குதல் நடத்தியவர்களை இந்த மண்ணில் இருந்து துரத்த வேண்டும் என தமிழரசுக் கட்சிக்கு ஆதரவான ஊடகமொன்று அடிக்கடி எழுதி வந்தது.

ஆனால் அந்த ஊடகத்தையும் உதறித் தள்ளி விட்டு, நாரந்தனையில் படுகாயமடைந்தவர்களையும் உதறி எறிந்து விட்டு,

எம் பதவிக்காக ஈபிடிபியை எதிர்க்க வேண்டும் என்றால் எதிர்ப்போம். மாறாக ஈபிடிபியை அணைத்தால்தான் பதவி கிடைக்குமென்றால் அதனையும் திறம்படச் செய்வோம் என்பதை தமிழரசுக் கட்சி செய்து காட்டியுள்ளது.

இச்செயலை அக்கட்சியின் தலைமை தமது இராஜதந்திர வியூகம் என நினைத்துக் கொள்ளலாம்.

ஆனால் நிலைமை அதுவல்ல என்பதைக் காலம் நிச்சயம் போதித்து நிற்கும்.

இது ஒருபுறம் இருக்க, ஈபிடிபியிடம் பொது மக்கள் சென்றால், ஈபிடிபியிடம் வேலைவாய்ப்புப் பெற்றால், ஈபிடிபியினர் வழங்குகின்ற உதவித் திட்டங்களை மக்கள் நாடினால் அவர்கள் எல்லாம் தமிழினத்துக்கு எதிரானவர்கள் என்று கூறிய தமிழரசுக் கட்சியினர், இன்று என்ன செய்துள்ளனர்.

தமிழ்த் தேசிய முன்னணியினர் வெற்றி பெற்ற இடங்களையும் கபளீகரம் செய்வதற்காக கொள்கையை விற்று, தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உதாசீனம் செய்து; தமிழ் மக்களை ஏமாற்றி பதவி தேவையென்றால் தென்பகுதியில் உள்ள தேசிய அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேருவோம் என்பதை வெளிப்படையாகக் காட்டியுள்ளனர்.

கூட்டமைப்புத் தலைமையின் இச்செயல் கட்சிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்தியிருந்தாலும் வாய்திறப்பதற்கு யாருளர்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று அமைந்தால் ஒழிய, கூட்டமைப்பின் போக்கை யாரும் எதுவும் செய்ய முடியாது என்பதே உண்மை.

# நல்லாட்சி அரசின் ஆயுள் மூன்று மாதங்கள் மட்டுமே

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

ஊழல் செயற்பாடுகள் மூலம் சொத்துகளைக் குவித்துக் கொள்ளும் நோக்கில் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

மேலும், ஊழல் செய்வதனை விடவும் இந்த அரசாங்கத்திற்கு வேறு எந்த இலக்கும் இல்லை எனக் குறிப்பிட்ட பீரிஸ், இவ்வாறாக செயற்பாடுகள் காரணமாக மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி விட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தான்தோன்றித்தனமான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக எதிர்க்கட்சிகள் அவசியமில்லை என்ற நிலை தோன்றிவிட்டது. அரசாங்கத்திற்கு உள்ளேயே பல பிளவுகள் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மூன்று அல்லது நான்கு மாதங்கள் மட்டுமே இந்த அரசாங்கத்தின் ஆயுள் உள்ளது எனக் குறிப்பிட்ட பீரிஸ், அதன் பின்னர் அரசாங்கம் நிலைபதில்சாத்தியமில்லை எனவும் அதற்கு முன்னர் தங்களின் பைகளை நிரப்பிக் கொள்வதனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அரசாங்கத்தில் உள்ளவர்கள் செயற்பட்டு வருகின்றனர் எனவும் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### முல்லைத்தீவு ஆண்டாங்குளம் பகுதியில்

## அடையாளம் தெரியாத நபர்களால் இராணுவத்தினரின் துப்பாக்கி பறிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஆண்டாங்குளம் காட்டுப்பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவரிடம் இருந்த AK47 துப்பாக்கி ஒன்றை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பறித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் சட்ட விரோத மரம் கடத்தும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த இராணுவத்தினர் முற்பட்டுள்ளனர்.

இதன்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் வைத்திருந்த AK47 துப்பாக்கியை சட்டவிரோத மரம் கடத்த முற்பட்ட நபர் ஒருவர் பறித்து கொண்டு தப்பியோடியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரை வலைவீசி தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-281)

## தொழிலாளர் தினத்தை ஒத்திவைக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

உலக தொழிலாளர் தின நிகழ்வுகளை ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள தொழிலாளர் தினநிகழ்வுகளை எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பௌர்ணமி தினமாகும்.

மே மாதத்தில் வருகின்ற பௌர்ணமி தினமானது பௌத்த மதத்தை தழுவுபவர்களுக்கு முக்கியமான பௌர்ணமி தினமாகும்.

ஆகையினால் மஹா சங்கரத்ன தேரர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தொழிலாளர தின நிகழ்வுகளை எதிர்வரும 7 ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## புதிய இராணுவ அதிகாரி நியமனம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் தம்பத் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை இராணுவத் தலைமையகம் இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

இந்த பதவியானது இராணுவத்தின் 2ஆவது உயர் பதவியாகும்.

இதற்கமைய மேஜர் ஜெனரல் தம்பத் பெர்ணான்டே இலங்கை இராணுவத்தின் 52 ஆவது பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளுக்கு அர்ப்பணிப்போம்



✦ இறைவன் வெளியிலும், வெகு தொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால், நம் உள்ளத்துக்குள்ளேயே அவன் இருப்பதாக உணர்ந்து கொண்டால் ஞானம் உண்டாகி விடும்.

✦ தனது இதயத்திற்குள் இறைவனைக் கண்டவன், வெளியுலகத்திலும் அவனைக் காண்பான். தனக்குள்ளே இறைவனைக் காணாதவன், கோயிலிலோ பிற இடங்களிலோ அவனைக் காண இயலாது.

✦ குணத்தாலும், அளவாலும் ஞானம் வேறுபடும். சாதாரண மனிதர்களுடைய ஞானம், ஓர் அறையை மட்டும் பிரகாசமடையச் செய்யும் தீப்ச்சுடரைப் போன்றது. பக்தனுடைய ஞானம் சந்திரனின் பிரகாசத்தைப் போன்றது. அவதார புருஷரின் ஞானம் பலமடங்குசக்தி கொண்ட சூரியப்பிரகாசத்தைப் போன்றது.

✦ இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள்கள் எல்லாம் ஆயிரம் மடங்காக நமக்கே மீண்டும் திரும்பி விடும். ஆனால், செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் எண்ணத்துடன் செய்பவர்களை இன்ப துன்பங்கள் தீண்டுவதில்லை.

✦ ஆயிரம் வழிமுறைகளில் முயன்றாலும், இறைவனுடைய அருளில்லாமல் எதனையும் அடைய முடியாது. இறைவனின் கருணை இன்றி யாரும் அவனை உணர முடியாது.

✦ காற்று எங்கும் நிறைந்திருந்தாலும், பாய்மரத்தை அதன் போக்கில் விரித்தால் தான் படகு தடையின்றி செல்லும். அதுபோல இறைவனின் கருணை எங்கும் நிறைந்திருந்தாலும், மனம் என்னும் பாய்மரத்தை அவன் பக்கம் விரித்தால் தான், சாதகமான சூழ்நிலையை அடையலாம்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**படுக்கை அறையை எப்படி அமைக்க வேண்டும்?**

கிழக்கு அறையில் படுக்கை:மத்திம பலன்
தெற்கு அறையில் படுக்கை:ஆரோக்கியம்
மேற்கு அறையில் படுக்கை:இன்பம்
வாயவிய அறையில் படுக்கை:இன்பம்
நைருதி அறையில் படுக்கை:சுகம் தரும்
ஈசானிய அறையில் படுக்கை:நோய் தரும்
146. உறங்கும் முறை எப்படி இருக்க வேண்டும்?
கிழக்கு திசை உறக்கம்:உடல் நலம் தரும்
மேற்கு திசை உறக்கம்:கெட்ட கனவுகள்
வடக்கு திசை உறக்கம்:அமைதழ கெடும்
தெற்கு திசை உறக்கம்:ஆரோக்கியம் தரும்
147. சமையல் அறை அமைக்க வேண்டிய இடம் எது?
கிழக்கு முக ஆக்னேய சமையல்:இன்பம்
ஆக்நேயத்தில் சமையல்:சிறப்பு
தெற்கு முக சமையல்:நோய் தரும்
நைருதியில் அடுப்பு வைத்தல்:மத்திம பலன்
மேற்கு முகமாக சமையல்:மத்திம பலன்
மேற்கு வாயவிய அடுப்பு:மத்திம பலன்
வடக்கு வாயவிய அடுப்பு:தொல்லை
ஈசானியத்தில் அடுப்பு:செல்வம் தடைபடும்
வடக்கு முக சமையல் செய்தல்:சண்டைகள்

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில பறயலாளங்குளம், மடுச்சந்தி, மல்லவராயர் கட்டையடம்பன், கட்டையடம்பன், தம்பனைக்குளம், பண்ணை வெட்டுவான், பண்ணை வெட்டுவான் தொழில்நுட்பக் கல்லூரி, இசைமலைத்தாழ்வு, கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம், மாதர் கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கண்டாவளை பிரதேச செயலாளர் நாகேஸ்வரன் காலமானார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் (வயது-58) நேற்று முன்தினம் காலமானார்.

பிரதேச செயலகத்தில் பணிகளை முடித்து புளியம்பொக்கணையில் உள்ள அரச விடுதிக்கு திரும்பிய அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. அவரது சாரதியின் உதவியுடன் உடனடியாக தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவ சோதனையில் தெரிவிக்கப்பட்டது.

சிறந்த நிர்வாகியான கோபாலபிள்ளை நாகேஸ்வரன், மக்கள் நலன் சேவைகளை இறுதி நாள்வரை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-312)

# கண்ணீர் அஞ்சலி



கரைச்சி பிரதேச செயலரும் கரைச்சி உதவி அரசாங்க அதிபருமான

அமரர்
## கோ.நாகேஸ்வரன்

அவர்கள் இறைபதம் அடைந்த தகவல் அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினருடன் நாமும் இணைந்து துயரினைப் பகிர்ந்து ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(சி-2014)

கிளிநொச்சி வர்த்தகர்கள் சார்பில்
வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி.

# நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்
## சுப்பிரமணியம் திருக்கேஸ்வரன்

அதிபர் யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

27.02.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் சுப்பிரமணியம் திருக்கேஸ்வரனின் பிரிவுத் துயரின் போது பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் துயரறிந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள்; பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் பல்வேறு வழிகளில் சரீர உதவி புரிந்தவர்களுக்கும் அத்துடன் மாணவர்களுடன் வருகை தந்து அஞ்சலி செலுத்திய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அத்துடன் சமயப் பிரார்த்தனை நடத்திய சில்லாலை றோ.க.த.க பாடசாலை, சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் அத்தோடு எமது இல்லத்தில் இருந்து இறுதி ஊர்வலத்தில் அணிவகுப்பு மரியாதையுடன் பாடசாலைக்கு பூதவுடலை எடுத்துச் சென்று அஞ்சலி நிகழ்வு நிகழ்த்திய சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலய பாடசாலை சமூகத்தினருக்கும் இந்நிகழ்வுக்கு சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கானை கோட்டக்கல்வி பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களிற்கும் அத்துடன் விசேட அஞ்சலி நிகழ்வு நடத்திய கனடா பண்கலைப் பண்பாட்டு கழகம், காலையடி மறுமலர்ச்சி மன்றம் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (29.03.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ்அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.
0776151783

(3419)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்

# சித்தார்த்தன் எம்.பியின் தாயார் காலமானார்

(யாழ்ப்பாணம்)

உடுவில் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற தர்மலிங்கம அவர்களின் மனைவியும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் தாயாருமான திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் (வயது97) அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் கந்தரோடை சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (ம)


தூரிகையில்...
Make-up, Facial
பயிற்சிகளின் புதிய பிரிவுகள்



(C-2016)

31.3.2018
முதல் ஆரம்பமாகி விடுமுறை நாள் வகுப்புக்களாக
சனி—ஞாயிறு
நாட்களில் நடைபெற உள்ளன
(சனி-3pm, ஞாயிறு-9.30am)
பயிலவிரும்புவோர் எமது அலுவலகதில் விபரங்களை அறிந்து கொள்ளலாம்
தூரிகை மத்திய கல்லூரி வீதி நெல்லியடி



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்



## திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாயில் அமைய காணியை அன்பளிப்பாகத் தந்துதவிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் தாயார் திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்

(2012)

## துப்பாக்கிச் சூடு...

உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தையில் உள்ள, அலாமா இக்பால் மாவத்தையில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெறுவதாகவும் அவர் கூறினார். அதேவேளை மோட்டார் சைக்களில் சென்ற இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், பாதாள உலககுழுவுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர். 25 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்ததாகவும் சடலம் தற்போதும் சம்பவம் இடம்பெற்ற வீதியில் கிடப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு மரண விசாரணை அதிகாரி சென்று விசாரணை நடத்திய பின்னரே, சடலம் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் சவச்சாலையில் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் கொழும்பில், இந்த மார்ச் மாதத்தில் இடம்பெற்ற நான்காவது துபாக்கிச் சூட்டுச் சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தொண்டர் ஆசிரி...

தொண்டர் ஆசிரியர்கள் இரண்டாவது நாளாக மாகாணசபை முன்றலில் தமக்குரிய நியமனத்தை வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது தொடர்பாக சபையில் பேசப்பட்ட போது வடக்கு முதலமைச்சர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக 600 மேற்பட்டவர்களுடைய பதிவுகள் நியமனத்துக்காக மேற்கொள்ளப்பட்டன. நிரந்தர நியமனம் வழங்குவதற்கான தகைமைகளில்சில ஆவணங்கள் போதாமையினால் அனைவருக்கும் வழங்கப்படவில்லை. சரியான ஆவணங்களின் அடிப்படையில் 182 பேருக்கு நியமனம் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

குறித்த நியமனத்தை பாதிக்கப்பட்ட ஏனைய தொண்டர் ஆசிரியர்கள் எதிர்த்தனர். எமக்கு விடயத்தை எடுத்துக்கூறினர். அதனடிப்படையில் நாம் நடவடிக்கை எடுத்தோம். பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி நேர்முகத் தேர்வினை மேற்கொள்வதற்கு மத்திய அரசில் இருந்து குழு ஒன்றை அனுப்புகிறார்கள். அதனடிப்படையில் ஏனையவர்களின் விபரங்கள் பரிசீலித்து பார்த்து நியமனம் வழங்கப்படும்.

இந்த விடயத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறிய போதும் அவர்கள் ஏதோ ஒருவித பயத்தின் காரணமாக அதை ஏற்க மறுக்கிறார்கள். அவர்களுக்குரிய ஆவணம் இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு சாதகமான விடயங்கள் தான் நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் எடுத்த நடவடிக்கைகளின் அடிப்படையிலும், எதிர்வரும் 2 ஆம் திகதி கல்வி அமைச்சருடன் மத்திய கல்வி அமைச்சரின் சந்திப்பு இருப்பதை கருத்தில் கொண்டும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முடிவுக்குள் நியமனம் வழங்க மாகாண சபை சார்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக அவைத்தலைவர் அறிவித்தார். (ம-9)

## வடக்கு மாகாண...

அதன்போதே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரன் ஆயுள் தண்டனை கைதியாக தற்போது இருக்கிறார். அவருடைய விடயத்தில் கருணை காட்டி மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு பொது மன்னிப்பளித்து அவரை விடுதலை செய்ய வேண்டும் என கோரி, மேற்குறித்த மனு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், மனுவின் பிரதிகள் பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவைத்தலைவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த விடயத்தை வலியுறுத்தும் வகையில் எழுத்துமூல குறிக்கப்பட்ட மனு ஒன்றில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களது கையெழுத்துக்கள் உள்ளடங்கலாக குறித்த மனு அவைத்தலைவரால் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சமையல் எரிவாயு...

வாழ்க்கைச் செலவு குழுவிடம் இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கை தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்துள்ள வாழ்க்கை செலவு குழு அதன்பின்னரே விலை அதிகரிப்பு குறித்து தீர்மானிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

பால்மா மற்றும் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு தொடர்பில் நேற்றைய தினம் நிதி அமைச்சில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## பருத்தித்துறை,...

இதில் ஈ.பி.டி.பி இரண்டு உறுப்பினர்களும் கூட்டமைப்புக்கு ஆதவாக வாக்களித்தனர். கூட்டமைப்பின ஐந்து உறுப்பினர்களின் வாக்கும் ஈ.பி.டி.பியினரின் இரண்டு வாக்குகளால் 7:6 என்ற அடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பின் தள்ளி த.தே.கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது இதில் நகரசபை தவிசாளராக யோசப் இருதயராசாவும் உப தவிசாளராக மதனி நெல்சனும் தெரிவு செய்யப்பட்டனர்

கட்சி பேதம் இன்றி அபிவிருத்தியினை முன்னெடுப்பதாக புதிதாக தெரிவான நகர சபை தவிசாளர் யோசப் இருதயராசா தெரிவித்தார்.

மேலும் வல்வெட்டித்துறை நகரசபை நேற்று 27.03.2018 பிற்பகல் 2 மணி அளவில் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் கூட்டம் ஆரம்பமான போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒன்பது உறுப்பினர்களில் ஒருவர் சபைக்கு சமுகமளிக்காத நிலையில எட்டு உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் ஈ.பி.டி.பியின் இரண்டுஉறுப்பினர்களின் ஆதரவுடன் த.தே.கூட்டமைப்பு ஆட்சியினைக் கைப்பற்றியது

வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளராக கோணலிங்கம் கருணானந்தராசாவும் உப தவிசாளராக ஆறுமுகம் ஞானேந்திரமும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-60)



அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி கல்வியங்காடு இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துப் போராட்டத்தின் போது...

# அரசாங்கத்தினை வீழ்த்தும் அவசியம் எமக்கு இல்லை

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இப்போது உள்ள நல்லாட்சி அரசாங்கத்தினை வீழ்த்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை எனவும், அதனால் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எம்மால் ஆதரவளிக்க முடியாது எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அவர் அங்கு கருத்து வெளியிடுகையில்,

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் மக்கள் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முக்கிய படிப்பினைகளைத் தந்துள்ளார்கள். அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இப்போது அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், வாழ்வாதார சிக்கல்களை தீர்த்து வைப்பதோடு மட்டுமல்லாது வடக்கு மக்களின் வேதனையை உணர்ந்து அதற்கும் தீர்வுகளை வகுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் தேவையாகும்.

எனவே நல்லாட்சி அரசாங்கம் கடந்த கால பிழைகளை தவிர்த்து செயற்படவேண்டும். அதற்காக நாம் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்தவர்களை மீண்டும் அழைக்கின்றோம்.

எவ்வாறாயினும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறும் சாத்தியக் கூறுகள் இல்லை. அதேபோன்று இந்த பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் ஆதரவளிக்கப் போவதும் இல்லை எனவும் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கண்டி வன்முறை தொடர்பில்

# சேதங்களை மதிப்பீடு செய்ய அமைச்சர்கள் குழு நியமனம்

(கொழும்பு)

கண்டி வன்செயலில் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்து விபரங்களை மதிப்பீடு செய்வதற்கு அமைச்சர்கள் குழுவொன்றினை நியமித்துள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை வழங்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்டி வன்செயல் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இச்சந்திப்பில், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள முதற்கட்ட நிதியுதவியானது அவர்களது இழப்பீடுகளுக்குப் போதுமானதாக இல்லை.

பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துகள், வாகனங்கள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளவர்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்கப்படவேண்டும் என பிரதமருக்கு வலியுறுத்தப்பட்டது.

இதன்போது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளையேற்ற பிரதமர், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், லக்ஷமன் கிரியெல்ல, அப்துல் ஹலீம், டி.எம். சுவாமிநாதன் ஆகிய நால்வர் உள்ளடங்கிய மதிப்பீட்டு குழுவை நியமித்து, அதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த இழப்புகளுக்கான மதிப்பீட்டு அறிக்கையை கையளிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (ம)

# அரசியலமைப்பை உருவாக்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது-சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

அனைத்து மக்களுக்கும் கொடுத்த ஆணையை நிறைவேற்றுகிற வண்ணமாக இந்த கூட்டரசாங்கம், முன்னேறுமாக இருந்தால் நல்லாட்சியை தொடர்ந்து வைத்திருக்கிற தேவை எமக்கு இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து யாழில் ஊடகவியலாளர்களினால் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

மேலும், பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அவருக்கு எதிரான முதலாவது காய் நகர்த்தலாக இருந்தாலும், அதன் நோக்கம் ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதற்கான முயற்சி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போதைய சூழலில் கூட்டு அரசாங்கம் வீழுமாக இருந்தால் புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் செயற்பாடு முற்றாகத் தடைபடக் கூடும் எனச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், இந்த அரசாங்கம் தொடர்ந்தும் இருந்த போதிலும் அரசியலமைப்பு உருவாக்கப்படுமா என்பதில் கேள்விகள் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 2017-ம் ஆண்டில் தொற்றா நோயினால் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் மரணம்

(கொழும்பு)

2017 ஆண்டில் மட்டும் ஒரு லட்சத்து 37ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தொற்றா நோயினாலும், 3017 பேர் விபத்தினாலும் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வாறான உயிரிழப்புக்கள் எமக்கு பாரிய பொருளாதார பின்னடைவை ஏற்படுத்துகின்றது என அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே.எம்.அஸ்லம் தெரிவித்துள்ளார்.

"வரும் முன் காப்போம்" எனும் தொனிப் பொருளில் அட்டாளைச்சேனை பிரதேசத்தினுள்ளவர்களுக்கான தொற்றா நோய் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இயந்திர மயமாக்கப்பட்ட வாழ்க்கை வட்டத்திற்குள் இன்று மனிதர்கள் மாட்டிக் கொண்டு தவிக்கின்றனர். அந்தளவுக்கு தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன.

இதனால் எமது வேலைகளை மிக இலகுவாக செய்யக்கூடியதாக இருந்தாலும் அதைவிடக் கூடியளவு நோய்களை எமது உடலுக்குள் உள்வாங்கக் கூடியவர்களாக நாம் மாறிவருகின்றோம்.

ஒரு அரச திணைக்களத்தில் கடமையாற்றுகின்றவர் தனது ஓய்வு நிலையை அடையும் முன்னர் 45 வயதில் தொற்றா நோய்க்கு ஆளாக்கப்பட்டு உயிரிழப்பாராயின் மீதமான 15 வருடங்கள் அரசாங்கத்துக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் பாரிய பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த விடயத்தை நாம் அறிந்தும் அறியாதவர்களாக இருந்துகொண்டு, இந்த வாழ்க்கை வட்டத்திலிருந்து வெளியேற முடியாதவர்களாக சிக்கித் தவிக்கின்றோம். (ம)

**நடமாடும் மிருக வைத்திய சேவை**

குரும்பசிட்டி சுன்னாகத்துக்கு அண்மையில் மிருகவைத்திய தேவைகளுக்கு.

தொடர்பு Dr.K. கிருபாகரன்
077 973 8802
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
(3411)

**ஆட்கள் தேவை**

பிரபல இரும்புப் பொருள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
தொடர்பு: சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், இல. 55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-2013)

**வீடு வாடகைக்கு உண்டு**

தாவடி வீதி, சுதுமலை மேற்கில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 124 6248 (3420)

**TRAINEE COURSES COUNSELLOR (பெண்)**

சாவகச்சேரியில் ஆங்கிலக்கல்வி நிலையமொன்றில் 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட சரளமாக ஆங்கிலம் பேசக்கூடிய பெண் ஒருவர் மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்தை பூர்த்தி செய்ய தேவை. முன் அனுபவம் தேவையில்லை. ஆரம்ப சம்பளம் ரூ.22,500/= நேர்முகப்பரீட்சைக்கு 29 March 2018 வியாழன் அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நேரில் வரவும்.

NALRAVI ENGLISH LANGUAGE LEARNING
கொழும்பு நிலையம்: 85/1A 1/1 St.Anthony's Mawatha Colombo 3
சாவகச்சேரி கிளை: 267 கண்டி வீதி (A9 வீதி) சாவகச்சேரி (சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கட்டிடத்தின் 2ம் மாடியில்) (3389)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1982)

**உடனடி வேலை வாய்ப்பு**
**V2 TRAVELS**

விமானப் பயணச்சீட்டுக்கள், விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)
தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
நேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241 (C-1987)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress (C-2004)

**தேவை**

பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையத்தில் பணிபுரிவதற்கு பெண் வேலையாட்கள் தேவை. (யாழ்.நகரை அண்மித்தவர்கள்)
077 656 0109 (3414)

**Deutsch and Italian வகுப்புக்கள்**

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT,
No.464, Hospital Road, Jaffna.
Tel:- 021 222 3382
மேலதிக தொடர்புகளுக்கு 077 078 2022 (C-2006)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (3375)

**WESTERN UNION WU**

moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com (C-2003)

**அண்ணா பொதிகள் சேவை**

976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது
வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு (C-2005)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் 27.03.2018 செவ்வாய்க்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உடுவில், மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் விசுவநாதர் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சித்திரலேகா (அமெரிக்கா) சித்தார்த்தன் (யாழ். பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களின் அன்புத் தாயாரும் கமலாம்பிகை, அன்னலச்சுமி, அமரர் குமாரசாமி, கைலாயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற Dr.M. வன்னித்தம்பியின் மைத்துனியும் Dr.ராமச்சந்திரன், மீனா அவர்களின் மாமியாரும், பிருந்தாகௌரி, தேவநந்தன், கலாவாணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.03.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லமான காமதேனு கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை, சுன்னாகம். (ஏ) தகவல் : குடும்பத்தினர்


**TECHNO WORLD**

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்ப்பாணம்)

பொறியியல் தொழில்நுட்ப பிரிவு மாணவன் கோகுலன் (JHC)... மாவட்ட நிலை 3 2A,B தேசிய நிலை 20 Z புள்ளி 2.9808...

முதன்முறையாக 2017 இல் க.பொ.த உ/த பரீட்சையில் தொழில்நுட்பப் பிரிவில் தோற்றி சாதனை படைத்த எமது கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகள்

உயிர் முறைமை தொழில்நுட்பம்

| Rank | Name |
|---|---|
| 01 | கேசனா A2B,I.R-29 Z-2.4745 |
| 03 | சரண்சனா |
| 04 | தி.திசாந்தினி |
| 07 | சி.டிலோஜி |
| 08 | பராந்தகன் |
| 09 | ஜெனோயன் |
| 10 | சோ.சாருஜீ |
| 11 | மாருதன் |
| 12 | கு.விதுஷின் |
| 13 | ந.உமாசாளினி |
| 18 | த.யான்சன் |
| 19 | நா.அபிஷேகா |
| 20 | ந.லலிதாயினி |
| 23 | வானுயன் |
| 24 | ப.விந்துயா |
| 25 | புவாத் |
| 23 | சௌமியா |
| 24 | யதுப்பிரியா |

கிளிநொச்சி மாவட்டத்தில்

| Rank | Name |
|---|---|
| 02 | மேரி கனிஸ்ரா |
| 04 | துசாந்தி |
| 05 | சசிப்பிரியா |
| 09 | ஜனுசனா |
| 10 | துசி |
| 15 | லகுவன் |
| 17 | சஞ்சிவன் |
| 18 | கோவர்த்தன் |
| 19 | கர்த்திகா |
| 30 | சுபோதினி |
| 26 | பானுயன் |
| 36 | சயிந்தன் |

பொறியியல் தொழில்நுட்பம்

| Rank | Name |
|---|---|
| 03 | கோகுலன் |
| 01 | தமிழின்யன் -3B-2.0458 |
| 04 | பிரவீன் |
| 12 | கோபிஸ்காந்த் |
| 18 | டக்ஸன் |
| 22 | நதீஸ்ரன் |
| 31 | யதுகுலன் |
| 35 | மதுசன் |
| 38 | தர்சன் |
| 44 | கஸ்வின் |
| 46 | அனுசன் |
| 49 | கிரிசாந்த் |
| 54 | குகராஜ் |
| 57 | துஸியந்தன் |
| 58 | செவின்ஸ் லெலோன் |

(C-2018)

A/L தொழில்நுட்பபிரிவு - 2020
ஆரம்பம் : 30.03.2018 077 017 5346


# சுய நலத்திற்காக கூட்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர எம்.ஏ.சுமந்திரன் ஈ.பி.டி.பி கட்சியிடம் நேரடியான ஆதரவு பெறவில்லை என ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமையை அறிந்தேன. என்னவாக இருந்தாலும் ஒருமித்து நியமனங்கள் நடைபெறவில்லை என்பது தெரிகிறது. ஆகவே பதவி வகிக்கின்றவர்கள் ஆட்சியை சரியான முறையில் கொண்டு நடத்த வேண்டும்.

அதேபோல் சாவகச்சேரி நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஈ.பி.டி.பி கட்சி ஆதரவு வழங்கியது என்பது தொடர்பில் சரியாக நான் அறியவில்லை.

எது எவ்வாறாக இருப்பினும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை அமைத்திருந்தால் தமிழ்தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளை கைவிட்டது. சுயநலங்கள் தான் எமக்கு முக்கியம் என்ற கருத்து ஏற்படும் என்பதுதான் என்னுடைய அவதானிப்பாக உள்ளது என தெரிவித்தார்.

மாநகர சபையில் கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் விசாரணைகள் தொடர்பாக கேட்ட போது,

யாழ். மாநகர சபை நிர்வாகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் புதிய மேயர் விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஊழல் விசாரணைகளுக்கு வடக்கு மாகாண சபை முழுமையான ஆதரவினை வழங்கும்.

ஊழல் தொடர்பான விடயங்களை விசாரணை செய்ய ஏற்கெனவே வடக்கு மாகாண சபையினால் விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

அக்குழு நடத்திய விசாரணைகளில் கடந்த யாழ்.மாநகர சபை நிர்வாகத்தில் ஊழல்கள் நடைபெற்று உள்ளது என்பதை கண்டறிந்துள்ளனர்.

எனவேதற்போது ஆட்சியில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பும் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் முறையான விசாரணை செய்ய வேண்டும். அவர்கள் செய்வார்களா? என்று பொறுத்திருந்து பார்ப்போம் என மேலும் தெரிவித்தார். (ம-9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்

## அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

**(முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நிர்வாக உத்தியோகத்தர், தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி - பிரதேச செயலர் இந்நாள் பிரதேச செயலர் கண்டாவளை)**

**மலர்வு**
**04 • 02 • 1960**



**உதிர்வு**
**26 • 03 • 2018**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை நாகேஸ்வரன் (முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நிர்வாக உத்தியோகத்தர், தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி - பிரதேச செயலர் இந்நாள் பிரதேச செயலர் கண்டாவளை) 26.03.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளை - தில்லையம்மா தம்பதியினரின் அன்புப்புதல்வரும் சரவணபவன்-காலஞ்சென்ற விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும், மலர்விழி (ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) யின் அன்புக் கணவரும் இளம்பரிதி (யாழ்ப்பாண இந்து ஆரம்ப பாடசாலை) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நிர்மலாதேவி, மதியழகன் மற்றும் பரமேஸ்வரன், செந்தமிழ்ச்செல்வி, சாந்தினி (பி.சு.சே. பணிமனை யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மங்கை, இந்துமதி, விக்னேஸ்வரமூர்த்தி, சுகந்தரூபி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - கிளிநொச்சி) மற்றும் காலஞ்சென்ற விஜயன், செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும் வித்யா, விநோசன், ராகவியின் அன்பு மாமாவும் கிரிசன், சஞ்சியா, லக்ஸ்மன் ஆகியோரின் சித்தப்பாவும், டாவிநாத், யதுசாந், நிரோஷ், தனுஷ், ஹரிஷ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (29.03.2018) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக 11.30 மணியளவில் பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் வைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் கலாசாலை வீதியூடாக கோண்டாவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**79,2ம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**உதவும் உறவுகள் சுவிச்சர்லாந்து, பரந்தன், கிளிநொச்சி.**

(3421)




# தேசிய மட்ட வலைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள்

தேசிய வலைப்பந்தாட்டச்சங்கததின் ஏற்பாட்டில் தேசிய ரீதியிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யானது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 24 ஆம திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

மொத்தம் 10 வலைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. பி என இரண்டு தெரிவு அணிகளும் பங்குபற்றியிருந்தன.

இந்தச் சுற்றுப் போட்டியானது எதிர்வரும் 27 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரையில் நடை பெறவுள்ளது. முதலாவது அரையிறுதியில் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட இணைந்த ஏ அணியுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட இணைந்த பி அணி மோதுகின்றது.

இரண்டாவது அரையிறுதியில் மேர்கன் டைல்ஸ் இணைந்த அணி யுடன இலங்கை ஸ்ரேட்டஸ் சேவிஸ வலைப்பந்தாட்ட அணி மோதவுள்ளது. (க-26)


## மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்

### வாண்மையில் வான்தொட மனதார வாழ்த்துகின்றோம்



திரு.பி.சிவகணேசன்



திருமதி மு.பரமேஸ்வரன்



திருமதி சு.இந்திரகுமார்

இன்று (28.03.2018) புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப்பட்டத்தைப் பெறும் எமது பாடசாலையின் பிரதி அதிபர் திரு.பி.சிவகணேசன், ஆசிரியர்களான திருமதி மு.பரமேஸ்வரன், திருமதி சு.இந்திரகுமார் ஆகியோர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாண்மையில் வான்தொட மனதார வாழ்த்துகின்றோம்.

(3417)

பாடசாலைச் சமூகம், மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்.






தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்ற யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களை மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் சகிதம் அழைத்து வருவதனை படத்தில் காணலாம்...


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.02.2018 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் அருணாசலம் மாணிக்கவாசகர்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (28.03.2018) புதன்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளன. வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (29.03.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (தென்னிங்கவத்தை, புலோலி மேற்கு, பருத்தித்துறை) நடைபெறவுள்ளதால். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ்அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

தென்னிங்கவத்தை
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(சி-2019)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.